பக்கங்கள்: இருபது
விலை ரூபா 5-00

Registered as a News Paper in Sri Lanka


# வலம்புரி
VALAMPURI

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 சித்திரை 01 சனிக்கிழமை 14-04-2001 தொலைபேசி: 3378 ஒலி: 116

மங்கையரின் அங்கமெல்லாம் தங்க நகைகளால் மின்னிப் பேசிட இன்றேவிரையுங்கள்!
அர்ச்சனா ஜுவலர்ஸ்
118, கஸ்தூரியார் வீதி.
176/1, நாவலர் வீதி.
யாழ்ப்பாணம்.
(கி/1768)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நாவலந்துறைப் படிப்பகம்

## ★ யுத்தநிறுத்தம் நீடித்து பேச்சுவார்த்தை மூலம்
# நாட்டில் சமாதானம் ஏற்படுவதற்கு
# அனைவரும் பாடுபடவேண்டும்!



### புத்தாண்டுச் செய்தியில் - நல்லைஆதீனமுதல்வர்

[யாழ்ப்பாணம்]

மலருகின்ற தமிழ்-சிங்கள புத்தாண்டில் நாட்டில் அமைதியும் நிலையான சமாதானமும் கிடைப்பதற்கு நாம் எல்லோரும் பாடுபடவேண்டும்.

யுத்தம் தந்த இழப்புக்களையும் அதன் வடுக்களையும் நாடு அனுபவித்துக் கொண்டிருக்கும்போது நிலையான சமாதானத்திற்காக பாடுபடுவது இந்நாட்டின் பிரஜைகள் ஒவ்வொருவரினதும் தலையாயகடமையாகும்,

இவ்வாறு நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய ஸ்சுவாமிகள் விடுத்த புத்தாண்டுச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.


அச்செய்தியில் அவர்மேலும் தெரிவித்துள்ளதாவது, நாட்டில் துன்பங்கள் நீங்கி மக்கள் மன நிம்மதியோடு வாழ்வதற்கு நாம் ஒவ்வொரும் பாடுபடவேண்டும்.

மலர்ந்துள்ள புத்தாண்டில் விடுதலைப் புலிகளின் யுத்த நிறுத்தமும், அரசின் தாக்குதல் தவிர்ப்பும் ஒன்றிணைந்திருப்பது மன நிம்மதியைத் தருகிறது: அரசின் தாக்குதல் தவிர்ப்பு யுத்த நிறுத்தமாக மாறி இரு தரப்பும் சமாதானப் பேச்சுவார்த்தை மூலம்சுமூகமான தீர்வுஒன்றை எட்ட வேண்டும்.

சமாதானப் பேச்சுவார்த்தை மூலம் கிடைக்கின்ற தீர்வே நிலையானதாக — அச்சமற்றதாக அமைய முடியும்.

தொன்று தொட்டு இடம் பெயர்வுகளால் தமிழ் மக்கள் படும் துன்பங்கள் சொல்லும் தரமன்று அவர்கள் தமதுவாழ்

→ 8ஆம் பக்கம் பார்க்க



## புத்தாண்டு வாழ்த்துக்கள்

வாசகப் பெருமக்கள், விளம்பரதாரர்கள், வர்த்தகப் பெருமக்கள், விற்பனை முகவர்கள், அன்பர்கள் ஆதரவாளர்கள் அனைவருக்கும்,

'வலம்புரிக் குடும்பம்'

தனது புத்தாண்டு நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதுடன்,

நாட்டில் அமைதியும் சமாதானமும் மலர்ந்து எல்லோர் வாழ்விலும் மகிழ்வும் சுபீட்சமும் நிலவ இறையருளை வேண்டுகின்றோம்.

நிர்வாகம்

## யுத்த நிறுத்தத்தை நீடிக்க முயற்சி
# நோர்வே தூதுவர் வெஸ்பேர்க் மீண்டும் வன்னிசெல்லவுள்ளார்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய தலைவர்களைச் சந்தித்துப் பேசுவதற்கு இலங்கைக்கான நோர்வே தூதுவர் யோன் வெஸ்பேர்க் மீண்டும் இரண்டாவது தடவையாக இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதிக்குச் செல்லவுள்ளார்.

நாளை மறுதினம் வன்னிக்குச்சென்று புலிகளின்தலைவர்களைச் சந்திப்பதற்கு யோன் வெஸ்ப்பேர்க் திட்டமிட்டுள்ளதாக கொழும்பிலுள்ள நோர்வே தூதரத்தை ஆதாரம் காட்டி செய்திகள் வெளியாகியுள்ளன.

நோர்வே தூதுவரினால் முன்வைக்கப் பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையில் அரசாங்கம் செய்த மாற்றத்தினால் புலிகள் தரப்பால் விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந் நிலையில் இருதரப்பையும் சுமுக நிலைக்கு கொண்டு வந்து மேலும் இரு தரப்பினரதும் யுத்த நிறுத்தத்தை நீடிக்கச் செய்வதை நோக்காகக்கொண்டே தூதுவர் வன்னி செல்லவுள்ளாரென்றும் தெரிவிக்கப் படுகிறது.

இதேவேளை இம் மாதம்

→ 8ஆம்பக்கம் பார்க்க

# உணவுப் பொருளுடன் லொறி கடத்தப்பட்டது

(வவுனியா)

வவுனியாவில் உள்ள பிரபல தமிழ்வர்த்தகரின் லொறி ஒன்று ஆறுலட்சம் ரூபாஉணவுப் பொருட்களுடன் கொழும்பு மாலிகா வத்தையில் வைத்து இனந் தெரியாதோரால் கடத்தப்பட்டுள்ளது.

புது வருடத்தை ஒட்டி வவுனியாவுக்கு விற்பனைக்காக் கொண்டு வந்த சீனி, வெங்காயம், உருளைக்கிழங்கு ஆகிய பொருட்களுடன் கடத்தப்பட்ட லொறி நேற்று கந்தாளையில் வெற்று லொறியாகப் பொலிஸாரினால்மீட்கப்பட்டுள்ளது.

மாளிகாவத்தையில் வைத்து லொறியைப் பின்தொடர்ந்து பிக்கப் வாகனம் ஒன்றில் வந்தவர்களால் லொறி கடத்தப் பட்டதாக அதன் உரிமையாளர் கௌரிநாதன் தெரிவித்துள்ளார். [ம]

# தேசிய சமாதானப்பேரவை 17 ந் திகதி யாழ் விஜயம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் தற்போதுநிலவும் உண்மை நிலைகளை அறிந்துகொள்ளவும் இங்குள்ள சமூக அமைப்புக்கள், மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுடன் கலந்துரையாடவும் தேசிய சமாதானப் பேரவை உறுப்பினர்கள் 15 பேர் இம் மாதம் 17 ம் திகதி யாழ்ப்பாணம் வரவுள்ளனர்.

ஐரோப்பிய மனித உரிமைகள் நிறுவனத்துடன் தொடர்பு வைத்துள்ள தேசிய சமாதானப் பேரவையில் தென்னிலங்கையில் உள்ள புத்தி ஜீவிகள் நடுநிலையாளர்கள் அங்கம் வகிக்கின்றனர்.

17 ம் திகதி யாழ்ப்பாணம் வருகை தரும் இவர்கள் 18, 19, 20 ம் திகதி வரை யாழ்ப்

→ 8ஆம் பக்கம் பார்க்க

# அரசின் அசமந்தமும் பிக்குகளின் எதிர்ப்புமே பிரச்சினைக்குத் தீர்வுகாணத் தடையாகவுள்ளது
## பிரிட்டன் பாராளுமன்ற உறுப்பினர் தெரிவிப்பு

(லண்டன்)

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்திற்குமிடையே சமாதானப் பேச்சுவார்த்தையை ஏற்படுத்தி இலங்கையின் இனப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண அரசின்அசமந்தப் போக்கும் பௌத்த குருமாரின் எதிர்ப்பும் தடையாக வுள்ளதென்று பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர் ரபடிபன்ஸ் குற்றம் சாட்டி யுள்ளார்.

அண்மையில்இலங்கைவந்து திரும்பிய பிரித்தானியபாராளுமன்றக் குழுவினரில் ஒருவரான ரபடிபன்ஸ் இலங்கையின் நிலவரம் தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையிலேயேமேற்கண்டவாறுதெரிவித்தார். அவர்மேலும் தெரிவிக்கையில்இலங்கையின்நிலைமைகளைபலபகுதிகளுக்கும்நேரில் சென்று நாம் அவதானித்ததன் அடிப்படையில் மக்களின் சொத்துக்களையும், ஜீவனோபாய பொருளாதார மூலங்களையும் இலங்கைஅரசு தான் தோன்றித்தனமாக அழித்து வருகிறதுஇதற்குரியஆதாரங்கள்எம்மிடம் உண்டென்றும் தெரிவித்தார்,

இதேவேளைஇலங்கைவந்த வேளை யில் பல் வேறுபிரதேசங்களில்பாராளு மன்றக் குழுவினர் எடுத்த பல புகைப் படங்களையும் அவர் தமது பிரித்தானிய தொகுதி மக்கள் பார்க்க வசதியாக காட்சிப் படுத்தியுள்ளார். (இ)

## ஊரடங்கு நீக்கம்

புத்தாண்டை முன்னிட்டு இன்று முழுநாளும ஊரடங்கு சட்டம் தளர்த்தப்பட்டிருக்குமென பலாலி படைத்தலைமையகம் அறிவித்துள்ளது. [வ

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

2001 ஏப்ரல் தொடக்கம் 2002 வரையில் உள்ள பன்னிரு இராசிகளின் சனீஸ்வரன், வியாழன், இராகு, கேது மாற்றம் பற்றிய பலன்கள் எங்கும் விற்பனையாகின்றது.

ஆசிரியர் சோதிஞானி ஆ. சண்முகலிங்கம் (சண் மாஸ்டர்) (கி/1775)

### தேவை

தமிழ்-ஆங்கில தட்டெழுத்தாளர் தேவை. முழு விபரங்களுடனும் விண்ணப்பிக்க வேண்டிய முகவரி விளம்பர இல.111, மே/பா, வலம்புரி. (கி/1788)

### புதிய புத்தகங்கள்

அம்பிகை பாகனின் ஆண்டு 5 புலமைப் பரிசில் 2001-2002 இற்கான முற்றிலும் புதிய பதிப்பு, ரமணனின் கம்பியூட்டர் நூல்கள், கேசவனின் அளவையியல், மெய்யியல் புத்தகங்கள், வண்ண மிகு வாழ்த்து மடல்கள் விற்பனையாகின்றன. பரணன் கொம்யூனிகேசன்ஸ் 138, இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம். தொலைபேசி. 2365, (கி/1787)

## இன்று சங்கராந்தி உற்சவம்

(யாழ்ப்பாணம்)

கொழும்புத்துறை மேற்கு விநாயகர் ஆலயத்தில் புதுவருடப்பிறப்பை முன்னிட்டு விசேட பூசைகளும் சங்கராந்தி தீர்த்த உற்சவமும் இன்று காலை 7 மணிமுதல் இடம்பெறவுள்ளன. (க-104)

வலிதெற்கு பிரதேச செயலர் பிரிவில்

# தனியான மிருகவைத்திய அதிகாரி அலுவலகம் அமைப்பதற்கு அனுமதி

(யாழ்ப்பாணம்)

வலிதெற்கு பிரதேச செயலர் பிரிவில் தனியான மிருக வைத்திய அதிகாரி அலுவலகம் அமைப்பதற்கான அனுமதி கிடைத்துள்ளதாக உடுவில் பிரதேச திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் த. தேவராஜன்தெரிவித்தார்.

இது வரை காலமும் வலி-வடக்கு பிரதேச செயலர் பிரிவில் மிருக வைத்திய அதிகாரி அலுவலகமே, உடுவில் பிரதேசத்திற்கான வேலையினை வழங்கி வந்தமைகுறிப்பிடத்தக்கது.

தற்போழுது தனியான அலுவலகம் ஒன்றை அமைப்பதற்கான அவசியம் குறித்து எடுத்துக் கூறியதை அடுத்து விவசாய, கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசனம், வடிகாலமைச்சின்மாகாணச்செயலாளரினால் இவ் அனுமதி அளிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

அத்துடன், மேற்படி அலுவலகத்தை சுன்னாகப்பகுதியில் அமைப்பதற்கு கடந்த 10 ஆம் திகதி நடைபெற்ற விவசாயக் குழுக் கூட்டத்தில் ஏக மனதாக தீர்மானிக்கப்பட்டதுடன், கட்டடப் பணிகள் விரைவில் ஆரம்பிக்கப் படவுள்ளன. (உ-2)

## பாடசாலை அதிபர்களுக்கு நேர்முகப் பரீட்சை

### யாழ்ப்பாணத்திலும் இடம் பெறும்

(கொழும்பு)

சேவைமூப்பு திறமை அடிப்படையில் பதவி உயர்வு பெறுவதற்கு தகமை இருந்தும் இதுவரை இப்பதவி உயர்வு தொடர்பான, நேர்முகப்பரீட்சைக்கு தோற்றாத அதிபர்களுக்கான நேர்முகப் பரீட்சை இம்மாதம் 26 ஆம், 27ஆம், 30ஆம் திகதி களில் பத்ரமுல்லையில் உள்ள அரசாங்க சேவை ஆணைக் குழுவின் கல்விச்சேவை அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இதற்கான அழைப்புக் கடிதங்கள் சகல தமிழ் மொழி மூல பாடசாலை அதிபர்களுக்கும் அனுப்பி வைக்கப் பட்டுள்ளதாக கல்விச் சேவைக் குழுவின் உதவிச் செயலாளர்; இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் நிர்வாகச் செயலாளருக்கு அறிவித்துள்ளார்.

இதேவேளை யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி மாவட்டங்களைச் சேர்ந்த பதவி உயர்வு தகமை பெற்ற அதிபர்களுக்கு, அவ்வப்பகுதிகளிலேயே நேர்முகப் பரீட்சை; வடக்கு-கிழக்கு மாகாண கல்வியமைச்சினால் நடத்தப் படவுள்ளது. (செ)

## இடமாற்றம்

(கல்வயல்)

சூச்சவெளி-நிலாவெளி பிரதேசசபையில் கடமையாற்றிய எழுதுவினைஞர் வகுப்பு1ஐச் சேர்ந்த சிவபாலதர்மகுலசிங்கம் பருத்தித்துறை நகராட்சிமன்றத்திற்கு வடக்கு கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவால் இடமாற்றம் செய்யப்பட்டு தற்பொழுது கடமையாற்றிவருகின்றார். (க-11)

## யாழ்.பல்கலைக்கழக பரீட்சை முடிவுகள்

[யாழ்ப்பாணம்]

யாழ்.பல்கலைக் கழககலை, பீடம் மற்றும் முகாமைத்துவ வணிகபீட 1999 ஆம் இறுதியாண்டு பரீட்சை முடிவுகள் நேற்று முன்தினம் வெளியாகின.

முகாமைத்துவ கற்கை நெறியில் முதலாம் தரத்தில் சித்தி பெற்றோர் விவரம் வருமாறு; ஏ டீன் ராஜ்குமார் எஸ் சுஜித்தா, கே. நந்தினி, எஸ் பிறீமாலா ஆகிய நால்வரும். வணிகபீட கற்கை நெறியிலும்கே கிரிதரனும் முதலாம் தரத்தில் சித்தியடைந்துள்ளனர்.

கலைபிரிவுமாணவர்களில் இந்துநாகரிகத்தில்எஸ். கார்த்திகா எஸ். தயாளினி

அரசியல் பீ.ஜெயதேவி, பீ தயாநந்தினி.

தமிழ் எஸ். தயாநிதி, ரி. சுதாரூபினிஎம். செல்வாம்பிகை.

மெய்யியல் எம். மரியசெல்வம்.

சங்கீதம், பரதநாட்டியம் சியாமளா. (க- 6)

## இன்று திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

கோவில் வீதியில் அமைந்துள்ள கிறீன் பார்க் பூங்கா திறப்பு விழா இன்று 10.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. [க-9]

புதுக்குடியிருப்பில்

## சூறாவளி

(வவுனியா)

புதுக்குடியிருப்பு, இரணைப்பாலை, மற்றும் ஆனந்தபுரம் பகுதியில் வீசிய கடும் சூறாவளிக்காற்றினால் பயன் தரும் மரங்கள் பலவும் முறிந்துள்ளதுடன் குடிசைகள் பலவும் சேதமடைந்தன. (க-05)


சயன்ஸ் அக்கடமி
நல்லூர்
பிரத்தியேக வகுப்பு
2003 A/L
இந்து நாகரிகம்
ஆசிரியர்:
திரு. K. குணரட்ணம்
(திங், புதன்-6.30 AM)
[கி-1791]



## சீட்டிழுப்பு முடிவுகள்

நியூற்றோன் எலெக்ரிக்கல்ஸ் ஸ்தாபனத்தின் பொன் விழாவை முன்னிட்டு 12-4-2001 அன்று நடை பெற்ற சீட்டிழுப்பில்,

பரிசு பெற்றோர் விபரம்

1ம் பரிசு
மேசை மின் விசிறி — பரிசுச் சீட்டு இல-520 N. ஆனந்தராசா, 40/1 நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

2ம் பரிசு
குளியறைக் கண்ணாடியும் அதனுடன் இணைந்த பொருட்களும் — பரிசுச் சீட்டு இல-837 சேவியர் எட்வேட், 579/2 குருநகர், யாழ்ப்பாணம்.

3ம் பரிசு
மின்சாரக் கேற்றில் — பரிசுச் சீட்டு இல-777 V. தவேந்திரன், அத்தாய், அல்வாய்

ஆறுதல் பரிசுகள்

1. மின்சார மேசை விளக்கு — பரிசுச் சீட்டு இல-765 திரு. A. நிக்சன், 13 தண்ணீர்த் தாங்கி வீதி, குருநகர்
2. குசினி பேசின் — பரிசுச் சீட்டு இல-890 வசந்தி எலெக்ரிக்கல்ஸ், சுன்னாகம்
3. மின்னடுப்பு — பரிசுச் சீட்டு இல-877 M. முரளிதரன் ஸ்ரேசன் வீதி, கோண்டாவில்
4. மின்னழுத்தி — பரிசுச் சீட்டு இல-695 K. சுரேஷ், 70/2 பலாலி வீதி, கந்தர்மடம்
5. HAND PUMP — பரிசுச் சீட்டு இல-904 N. சங்கர், செட்டித்தெரு, நல்லூர்
6. மேசை விளக்கு — பரிசுச் சீட்டு இல-949 K. செல்வராசா, துன்னாலை வடக்கு கரவெட்டி
7. வட்டரியூப் லைற் — பரிசுச் சீட்டு இல-901 N. துரைசிங்கம், G. P. S. வீதி, கல்வியங்காடு

பரிசு பெற்ற மின்னிணைப்பாளர்களின் விபரம்

1. T. தங்கசிவம், ஏழாலை மத்தி, ஏழாலை
2. T. ஆறுமுகம், 6 இராச வீதி, நல்லூர்
3. R. சண்முகானந்தன், 18/1 சிவகுருநாதர் வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம்
4. S. ஜெயரட்ணசிங்கம், 140 பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்
5. P. இராசகுமார், மாதாங் கோவிலடி, அல்வாய்;

பரிசு பெற்றோர் கொள்வனவுச் சிட்டை, பற்றுச் சீட்டு என்பவற்றை ஒப்படைத்து பரிசுகளைப் பெற்றுக் கொள்ளவும். எமது பொன் விழாக் கொண்டாட்டங்களில் கலந்து கொண்ட அனைவருக்கும் எமது நன்றியையும் புத்தாண்டு வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

### நியூற்றோன் எலெக்ரிக்கல்ஸ்

141, 143, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
T. P. 2037 (கி-1789)



லாலா சோப் ஸ்தாபனத்தாரின்
புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

எமது சோப் பாவனையாளர்களே

லாலா சோப் சன்சயின் சோப் விளம்பரத்திற்காகவும், பாவனையாளர்களின் நன்மை கருதியும் எமது அதிர்ஷ்டலாப சீட்டு இழுப்பை இரண்டாவது முறையாக நடத்துகின்றோம்; இன்று தொடக்கப் அதிர்ஷ்டலாப சீட்டு விற்பனையாகின்றன.

பரிசில்கள்

1 வது ஆண்களுக்குரிய துவிச்சக்கர வண்டி
2 வது பெண்களுக்குரிய துவிச்சக்கர வண்டி
3 வது கதிரை செற்றி
4 வது 5 பிளாஸ்ரிக் கதிரைள்
5 வது 6 சுவர் மணிக்கூடுகள்

அதிர்ஷ்டமாக வழங்கப்படும் என்பதனை அறியத்தருகின்றோம்.

லாலா சோப் தொழிற்சாலை
அச்சுவேலி.

(கி-1790)


## கண்ணீர் அஞ்சலி

சாவகச்சேரி பிரதேச சபையில் எழுதுநராக கடமையாற்றும்

செல்வி கு. காயத்திரி
அவர்களின் அன்புத் தந்தையார்
திரு. க. குககுமாரராசா

அவர்களின் மறைவுக்கு எமது கண்ணீர் அஞ்சலிகளைக் காணிக்கையாக்குவதுடன் அவருடைய ஆத்மா சாந்தியடையப்பிரார்த்திக்கின்றோம். அவரின்பிரிவால் துயருறும் குடும்பத்திற்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிக்கின்றோம்;

தலைவர், செயலாளர்,
உறுப்பினர், உத்தியோகத்தர்,
ஊழியர், நலம்புரிச் சங்கம்,
சாவகச்சேரி பிரதேச சபை.

[2916]

# புத்தாண்டுச் சிறப்பு மலர் - 2001

## இலங்கையில் சாந்தியும், சமாதானமும் நிலவ

## சித்திரைப் புத்தாண்டு சிறப்புடன் மலரட்டும்

மதிவாணர் செ. மதுசூதனன்

பண்டைக் காலந்தொட்டுப் பல்வேறு தேச, சமூக மக்களாலும், பல்வேறுவகைகளில் பண்டிகைகள் கொண்டாடப்பட்டு வருகின்றன. அந்த வகையில் தமிழ் மக்களும் தங்களுக்கான பண்டிகைகளை ஏற்படுத்திக் கொண்டாடி மகிழ்கின்றனர். வானியல், சோதிட அடிப்படையில் சூரியன் தை முதல் ஆனி முடியவுள்ள ஆறு மாத காலத்தில் (உத்தராயண காலம்) வட திசை நோக்கிச் சஞ்சாரம் செய்கின்றது. ஆடி தொடங்கி மார்கழி ஈறாகவுள்ள மற்றைய ஆறுமாத காலத்திலும் (தட்சணாயணகாலம்) தென் திசை நோக்கிச் சஞ்சரிக்கின்றது. சமய அடிப்படையில் இக்காலம் தேவர்களுக்கு ஒரு முழு நாளாகவும், முறையே பகலிரவாகவும் கொள்ளப்படுகின்றது. தை முதல் ஆனி வரையான உத்தராயண காலத்தில் பகலிலும், ஆடி முதல் மார்சழி வரையுள்ள தட்சணாயண காலத்தில் இரவிலும் விவாகம் முதலிய சுபசோபனாதிகளை நடத்துவது நன்றெனச் சோதிட நூல்கள் கூறுவதும் நோக்கற்பாலது.

இந்த அடிப்படையிலே, எமது முன்னோர்கள் தை முதலாம் நாளில் உழவர் திருநாளாகும். தைப்பொங்கலையும், ஆடி முதலாம் நாளில் ஆடிப் பிறப்பு என்னும் பண்டிகையையும் ஏற்படுத்திக் கொண்டாடி வரலாயினர். ஆதியில் தமிழர்கள் ஆடிப் பிறப்பையே தமது ஆண்டுப் பிறப்பாகவும் கொண்டாடியதாகக் கருதப்படுகின்றது. இவற்றை அந்நாளில் தாம் கைக்கொண்ட வாழ்க்கை நெறிக்கிணங்கவே கொண்டாடி வந்தார்கள்.

### சமயச் சார்பு

ஆதியில் தமிழர்கள் சைவம் என்னும் சிவநெறிக்கிணங்கவே வாழ்ந்து வந்தனர். உள்ளத் தூய்மையையும், உடற் தூய்மையையும், வலியுறுத்தும் அந்நெறிக்கமைய, இவ்வுலக வாழ்க்கை இனிமையாக அமைய வேண்டும். அது மறுமைக்கும் உதவ வேண்டும் என்ற குறிக்கோளுடனேயே தங்கள் பண்டிகைக் கொண்டாட்டங்களையும்உருவாக்கிக் கொண்டார்கள். இதன் பரிணாம வளர்ச்சியாக, மேட இராசிக்குச் சூரியன் செல்லுகின்ற (இளவேனிற் காலத் தொடக்க சித்திரை மாதத்தின் முதல் நாள் தமிழர்களின் புத்தாண்டுத் தினமாக வகுக்கப்பட்டுக் கொண்டாடப்பட்டு வருகின்றது. தமிழ் மக்கள் பெரும்பாலாராக வாழும் பிரதேசங்களில் பசியும், பிணியும் நீங்கி வசியும், வளனும் பெருகும் மகிழ்ச்சிக்குரிய இலைதுளிர் காலமாகிய இவ்வசந்த காலத்தில் புத்தாண்டுக் கொண்டாட்டங்களை நம்மவர் அமைத்துக் கொண்டமை சாலவும் பொருத்தமாகவே தோன்றுகின்றது.

தமிழ்ப் பண்பாட்டின் சிகரமாய் விளங்கும் மதுரை மீனாட்சி அம்மன் கோயிலின் மூலத்தானத்தை வடக்கு நோக்கிச் செல்லும் சூரியன் இந்நாளில் தான் கடக்கிறது. இது வானியற் கலையும், சமயமும் ஒத்தியங்குவதைக் காட்டுவதாக விஞ்ஞான விற்பன்னர்கள் கூறுவார்கள். நமது இலங்கையில் வாழும் பெரும்பான்மையினத்தவர்களான சிங்கள மக்களும் இத் திருநாளைத் தான் தங்கள் புத்தாண்டுத் தினமாகக் கொண்டாடி மகிழ்கின்றார்கள். புத்த மதத்தவர்களாகிய இவர்கள் முருகப் பெருமான் மேல் மாறாத பத்தியுடையவர்கள்.

### கொண்டாட்டம்

புத்தாண்டில் மக்கள் மருத்துநீர் வைத்து மங்கல நீராடிப் புத்தாடை புனைந்து, மங்கலப் பொருட்களுடன் திருக்கோயில்களுக்குச் சென்று வழிபடுவர். விசேடமாகச் சமைக்கப்பட்ட புத்துணவை உற்றார் உறவினருடன் சேர்ந்து உண்டு மகிழ்வர். இராசதம், தாமசம் ஆகிய குணங்களை நீக்கிச் சத்துவ குணம் மேலோங்கச் செய்வதன் மூலம் உள்ளத் தூய்மையையும் (அகத் தூய்மை), வீடுகளையும் சுற்றுப் புறங்களையும் சுத்தம் செய்து, நீராடிப் புத்தாடைகள் அணிவதன் மூலம் புறத் தூய்மையையும் பேணிக் கொள்வது நம் முன்னோர் வழக்கு. இப்புத்தாண்டு தினத்தில் அவற்றைச் சங்கல்பம் செய்து கொள்வர். கை விசேடம் வழங்குதல் பல்வேறு விளையாட்டுப் போட்டிகளை நடத்துதல், உற்றார், உறவினர் இல்லங்களுக்குச் சென்று கொண்டாடுதல், பகைமையை மறத்தல் போன்ற நிகழ்வுகளும் புத்தாண்டையொட்டி மேற்கொள்ளப்படுகின்றன. சிறுவர்களுக்குச் சிந்தையில் சந்தோஷத்தை உண்டு பண்ணும் ஒரு திருநாளாகவும் இது விளங்குகின்றது.

### சூழ்நிலை

ஆயினும், இத்தமிழ்ப் புத்தாண்டினை இலங்கை வாழ் தமிழர்கள் மன நிறைவோடு கொண்டாடக் கூடிய சூழ்நிலை இன்றில்லை. யுத்தக் கொடூரத்தால் பாதிக்கப்பட்டு, பெற்றோரை, உற்றார், உறவினரை இழந்து, அங்கவீனமுற்று சொத்து சுகங்களை இழந்து அகதிகளாகி முகாம்களிலும் மாற்றார் இல்லங்களிலும் அவதியுறும்நிலையே இங்கு காணப்படுகிறது. அத்துடன் சட்ட ஒழுங்குகள் சீர்குலைந்ததனால் ஏற்பட்ட தாக்கம் நமது சமுதாயத்தைச் சீரழித்துச் சின்னாபின்னமாக்கியுள்ளது. கொலை, களவு, காடைத்தனம் போன்ற பண்டைய தமிழ்ப் பண்புக்கு மாறான செயல்கள் நாளுக்கு நாள் வளர்ந்து வருகின்றன. இந்நிலையில் பண்டிகைகள் கொண்டாடப்படுவதே அர்த்தமற்றதாய் விடுகிறது.

### பிரார்த்தனை

எனவே, ஒரே புதுவருடத்தைக் கொண்டாடுகின்ற சிங்கள - தமிழ் இனங்களுக்கிடையில் அதுவும் ஒத்த கலாசார விழுமியங்களைக் கொண்ட இம்மக்களிடையில் ஒருவரையொருவர் மதிக்கும் புரிந்துணர்வு உண்டாகி, பகைமையுணர்வுகள் மறக்கப்பட்டு உரிமைகளை வழங்கி, ஒற்றுமையுடன் வாழும் நிலைமையை மலரும் இனிய விஷு புத்தாண்டு வழங்க வேண்டும் என்பதே எல்லோரினதும் எதிர்பார்ப்பாகம் உள்ளது. நல்லமைதியையும், சமாதானத்தையும் மலரும் விஷு வருடம் நல்க வேண்டும் என்று எல்லாம் வல்ல பரம்பொருளை இந்நாளில் இறைஞ்சிப் பிரார்த்தனை செய்வோமாக.

வாழ்க விஷு புத்தாண்டு
வளர்க சாந்தியும்
சமாதானமும்.


அனைத்து அன்பு நெஞ்சங்களுக்கும்
வினோவின் இனித்திடும் புது வருட
நல் வாழ்த்துக்கள்.

யாழ். நகரில் தங்க நகை உலகில்
மங்காப் புகழ் பெற்றவர்கள்

**வினோ**
**நகைப் பூங்கா**

185, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T. P, FAX - 2824

(கி-1662)

அனைவருக்கும் இனிய புத்தாண்டு
நல் வாழ்த்துக்கள்

தரமான பலசரக்குப் பொருட்களை
நியாயவிலையில் மொத்தமாகவும்,
சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள

**சிவா பிறதர்ஸ்**

87, கே. கே. எஸ் வீதி, சுன்னாகம்.
(கி-1667)

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்



மின்னிடும் அசல் 22 கரட் தங்க நகைகளை உங்கள்
எண்ணம்போல் தெரிவுசெய்திட மின்னிடும் மதனா

**மதனா ஜுவல்லறி**

தங்கப்பவுண் நகை வியாபாரம்

177/3, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

இணை நிறுவனம்:-

**மைதிலி ஜுவல்லறி**

190A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (கி-1654)

# புத்தாண்டுச் சிறப்பு மலர் - 2001


வாடிக்கையாளர்கள், அன்பர்கள், நண்பர்கள் அனைவருக்கும்
எமது இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்.

உங்களது நயம் நம்பிக்கை நாணயமுள்ள தங்க வைர
நகைகளுக்கு சிறந்த ஸ்தாபனம்.

**ஸ்ரீ வாணி நகை மாடம்**

★ **தங்கப் பவுண் நகைவியாபாரம்** ★

173, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(கி-1447)


## சித்திரைப் பெண்ணே வருக! சிறப்புடைவாழ்வு தருக.

சித்திரைப் பெண்ணே வருக! வருக!!
இத்தரை பொலிவுற வருக! வருக!!
சைவமும் தமிழும் தழைத்திட வருக
வையகமெங்கும் வளம்பெற அருள்க

ஈழத்தமிழர் இன்னல்கள் நீங்க
இனிய நல்வாழ்வு தந்திட வருக
இது வரை வந்த இன்னலாண்டுகள்
ஈழத்தில் எமக்கினி வேண்டாம் நங்காய்

புத்தாண்டுப் பெண்ணே வருகின்றாயென
புத்தூக்கமாக வரவேற்கின்றோம்
வரவேற்கும் எம்மனம் நோகாமல்
வாழ்வில் நலம்பல தந்தருள் புரிக

பத்தரைமாற்றுப் பசும்பொன் ஒத்த
சித்திரைப் பெண்ணே சிறப்புற வருக
நித்தம் எம்மக்கள் சித்தம் கலங்காது
சித்திரையாளே செய்குவாய் நன்றே;

சர்மா
நீர்வேலி


எம் இனிய தமிழ் மக்களுக்கு புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்.

வெளிநாட்டிலிருந்து தருவிக்கப்பட்ட
ஸ்கேட்டன் பிளவுஸ், டெனிம் சேட், றவுசர், சோகோசேட்,
ரீசேட், மற்றும் வெளிநாட்டு ஆடைத் தினுசுகளை

**மலிவாகவும், தரமாகவும் பெற்றுக்கொள்ள
நீங்கள் நாட வேண்டிய ஒரே ஸ்தாபனம்**

**“பாத்தி மாஸ்”**

இல. 100, மின்சார நிலைய வீதி, பெரிய கடை,
யாழ்ப்பாணம்.

(கி-1652)

இன்னல் ஓடி இன்பங்கள் மலர
புத்தாண்டு வழி சமைக்கட்டும்

நவீன அழகிய தங்க ஆபரணங்களுக்கு
சிறந்த ஸ்தாபனம்

**விஷ்ணு ஜுவல்லறி**

**தங்கப் பவுண் நகை வியாபாரம்**

181, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(கி-1448)

பிறந்துள்ள புத்தாண்டு அனைவருக்கும் சாந்தி, சமாதானம், சௌபாக்கியம்
நிறைந்த ஆண்டாக அமையவேண்டுமென பிரார்த்திக்கிறோம்.

மோட்டார் சைக்கிள், அதன் உதிரிப்பாகங்கள் விற்பனையில்
யாழ். நகரில் முன்னோடியாகத் திகழ்பவர்கள்.

**அருள் விநாயகர் மோட்டோர்ஸ்**

*103, ஸ்ரான்லி வீதி,* யாழ்ப்பாணம்.

**அருள் விநாயகர் ரேடஸ்**

*106, ஸ்ரான்லி வீதி,* யாழ்ப்பாணம்.

கிளை: பிரதான வீதி,
சங்கானை.

(கி-1656)

# புத்தாண்டுச் சிறப்பு மலர் - 2001


அனைவருக்கும் எமது புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்!
தங்கநகை உலகில் மங்காப் புகழ் பெற்றவர்கள்.

## கணேசா நகையகம்

194, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

இணையகம்:

கணேசா நகையகம்
123, பஜார் வீதி,
வவுனியா.

கணேசா நகையகம்
124, செட்டித்தெரு,
கொழும்பு-11.

(கி-1681)

அனைவருக்கும் எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்
குறோசறி வகைகள் மற்றும் இந்தியன்
ஊது பத்தி வகைகளுக்கு

## கமலேஸ்வரி ஸ்ரோர்ஸ்

162, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

(கி-1685)

அனைவருக்கும் எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்

பிளாஸ்ரிக், சில்வர், றேடியோ, ரி. வி. மற்றும் விளையாட்டுப் பொருட்களை
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள:

## அம்பாள் பல்பொருள் வாணிபம்

176, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
T. P. 2531

(கி-1683)

அனைவருக்கும் எமது புத்தாண்டு
நல் வாழ்த்துக்கள்!

நவ நாகரிகத்திற்கு ஏற்ற தங்க நகைகளை தரமாக
செய்து தருபவர்கள்




## துர்கா நகைப் பூங்கா

★ தங்கப்பவுண் நகை வியாபாரம் ★
71, கன்னாதிட்டி,
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்;
T.P. 2228

(கி-1682)

அன்பான வாடிக்கையாளர்களுக்கு கொமர்ஷல் வங்கியினரின்
புத்தாண்டு வாழ்த்துக்கள்!



மலருகின்ற புத்தாண்டில்
மகிழ்வுடன் கூடி
புத்தாடை தனை உடுத்தி
புதுப்பொழிவுடன் திகழ்ந்து
உற்றாருடன் இணைந்து
உற்சாகத்துடன் உரையாடி
சீரும் சிறப்பும் பெற்று வாழ
வாழ்த்துகின்றோம்!!

மலரும் புத்தாண்டில்!

நல்லவையே நடக்கட்டும்!

நடப்பவையெல்லாம் நல்லவையாகட்டும்!

COMMERCIAL BANK

## கொமர்ஷல் வங்கி

உங்கள் ஆதாயமே எங்கள் நோக்கம்

(கி/1700)

# புத்தாண்டுச் சிறப்பு மலர் - 2001

வாடிக்கையாளர்கள், அன்பர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள்
அனைவருக்கும் எமது இனிய புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்

சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்ட
மிக்ஷர், பகோடா, மஸ்கற்,
பூந்திலட்டு, மைசூர்பாகு, கடலை,
கச்சான் அலுவா, பருப்பு வகைகள்
என்பனவற்றை சுவைத்து மகிழ்ந்திட

**சாரிபாத் மிக்ஷர்**

(ஓடருக்கும் பெற்றுக்கொள்ளலாம்)
279, பலாலி வீதி, திருநெல்வேலி.
ஆலடிச்சந்தி
(கி-1695)

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் இனிய புத்தாண்டு
நல் வாழ்த்துக்கள்.
நாளைய நாகரீகத்தை இன்றே
தையற்கலையில் புகுத்தும் தையற்கலை
முன்னோடிகள்

**ரவி தையலகம்**

ஆடவர்களுக்கான சகலவகை
ஆடைகளையும் சிறந்தமுறையில்
குறித்த தவணையில் தைத்து
பெற்றுக்கொள்ளலாம்
கோண்டாவில் வீதி,
இருபாலைச்சந்தி, கோப்பாய்.
(கி-1809)

இன்று தேரேறும் காரைநகர் வாரிவளவு பிள்ளையாரின் அருள்கிடைக்க
அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்கள்:
மின்சார உபகரணங்கள், சைக்கிள் உதிரிப்பாகங்கள் என்பவற்றுக்கு

**சிவதர்ஷன்**

394, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
T.P. 2417
(கி-1692)

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும்
சண்ரெக் ஸ்தாபனத்தாரின் புத்தாண்டு
நல்வாழ்த்துக்கள்
மின்சார உபகரண
விற்பனையாளர்கள் T.V. அன்ரனா
பொருத்துனர்கள், போட்டோ பிரதிசேவை
உள்நாட்டு, வெளிநாட்டு தொலைபேசி
சேவையை வழங்குபவர்கள் மற்றும்
நீண்டகால மின் இணைப்பு ஒப்பந்த
சேவையாளர்கள்.
உங்கள் சேவையே எங்கள் திருப்தி.

**"சண்ரெக்"**

பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு
நல்லூர் மார்க்கட்.
தொ.பே. இல: 021- 2864
(கி-1808)

வாடிக்கையாளர்கள், அன்பர்கள், நண்பர்கள். அனைவருக்கும் எமது புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்
பார்த்தால் வாங்குவீர்கள் ! வாங்கியதும் திருப்தியடைவீர்கள் ! !
கண்ணைப்பறிக்கிறது என்னை இழுக்கிறது வண்ணம் நூறு விதமோ!
விண்ணோடும் மண்ணோடும் இல்லாத வண்ணங்கள் பட்டோடும் நூலோடும் மிளிர்கிறது.

**மகாநதி புடவை அகம்**

முகூர்த்தப் பட்டுப் புடவைகளுக்கு அதிர்ஷ்டமான இடம்
16, நவீன சந்தை, 16, நவீன சந்தை (மேல் மாடி) யாழ்ப்பாணம். [கி 1806)

துன்பங்கள் நீங்கி இன்பங்கள் சூழ சௌமியாவின் சித்திரைப் புத்தாண்டு வாழ்த்துக்கள்
ஆண்கள், பெண்களுக்கான ஆடைத் தெரிவுகளுக்கு

**சௌமியா ரெக்ஸ்**

ஆண்களுக்கான சகலவிதமான ஆடைகளும் நவீன முறைப்படி
அமைத்துக் கொடுக்கப்படும்.
குறிப்பு: எமது ஸ்தாபனத்துக்கு வேறு கிளை நிறுவனங்கள் கிடையாது.
இல. 4, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.
(கி-1813)

# புத்தாண்டுச் சிறப்பு மலர் - 2001


## வாழ்த்துகின்றோம் வாழ்த்துகின்றோம்

அன்பான வாடிக்கையாளர்களே!

மலரும் புத்தாண்டில் உங்கள் குடும்பத்திற்கு நிறைவான மகிழ்ச்சியும் எமது பிரதேசத்திற்கு நிலையான சமாதானமும் கிடைக்கப்பெற நாம் பிரார்த்திக்கின்றோம்.

**உங்கள் தேவைகளை நிறைவு செய்ய எங்கள் சேவைகள் இதோ!**

★ நடைமுறைக் கணக்குகள்
★ ஜனஜய சேமிப்புக் கணக்குகள்
★ சிசு உதான சேமிப்புக் கணக்குகள்
★ இசுறு உதான சேமிப்புக் கணக்குகள்
★ வனிதா வாசனா சேமிப்புக் கணக்குகள்
★ யாத்திரிகர்கள் கணக்குகள்
★ முதலீட்டு சேமிப்புக் கணக்குகள்
★ வதிவற்றோர் நாணயக் கணக்குகள்
★ வதிவுள்ளோர் நாணயக் கணக்குகள்
★ சேமிப்புக் கணக்குகள்
★ நிலையான வைப்புக்கள்
★ வெளிநாட்டு நாணய மாற்றல்கள்
★ வர்த்தகர்களுக்கான கடன் திட்டங்கள்
★ ஆசிரியர்களுக்கான கடன் திட்டங்கள்
★ தனியார் அரச கூட்டுஸ்தாபன ஊழியர்களுக்கான கடன்கள்
★ பிரதேச சபை ஊழியர்களுக்கான கடன்கள்
★ வீடமைப்புக் கடன்கள்
★ சுய தொழில் ஊக்குவிப்புக் கடன்கள்
★ வரையறையற்ற அடமானக் கடன்கள்
★ நகை அடைவு கடன்கள்
★ தற்காலிக மேலதிகப் பற்றுக்கள்
★ உத்தரவாதக் கடிதங்கள்
★ நாணயக் கடிதங்கள்

நாடளாவிய தொலைநகல் பணமாற்றங்கள்

**உங்கள் வளமான வாழ்விற்கு வழிகாட்டும் வங்கி**

# மக்கள் வங்கி

(கி-1689)

# புத்தாண்டுச் சிறப்பு மலர் - 2001

அனைத்து அன்பு நெஞ்சங்களுக்கும் எமது இதயம் நிறைந்த
புத்தாண்டு வாழ்த்துக்கள்:
உங்கள் கற்பனையில் தோன்றும் டிசைன்களில் தங்க நகைகளை
22 கரட்டில் செய்து கொள்ள

## ஸ்ரீ காமாட்ஷி நகைமாடம்

286, ஸ்ரான்லி வீதி,
முட்டாஸ் கடைச் சந்தி,
யாழ்ப்பாணம்.

61, இராமநாதன் வீதி,
யாழ்ப்பாணம்.

[கி/1673]

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது இனிய
புதுவருட வாழ்த்துக்கள்.

நவீன டிசைன்களில் அசல் 22 கரட் தங்க நகைகளுக்கு இன்றே நாடுங்கள்

## ஒலிம்பிக் நகைத் தொழிலகம்

இல. 190/4, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

உரிமையாளர்:- ச.சந்திரசேகரம்
(சின்னமணி)

[கி/1676]

வாடிக்கையாளர்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள்
அனைவருக்கும் எமது இதயம் கனிந்த
புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்.

அழகுசாதனப் பொருட்களின் சாம்ராஜ்யம்
அதுவே

## சாருஜன் பான்சி

16 B. ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
T.P 2586

(கி-1674)

அனைவருக்கும் எமது இனிய புத்தாண்டு நல்
வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
காலத்தால் அழியாத நவ நாகரிக தங்க நகைகளை
உங்கள் எண்ணம் போல் தெரிவுசெய்திட


## ஜெயகிருஷ்ணா
### ஜூவல்லர்ஸ்

★ தங்கப்பவுண் நகை வியாபாரம் ★

158, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(கி-1663)

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள், வர்த்தகப் பெருமக்கள் அனைவருக்கும்
சித்திரைப் புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்

★ மோட்டார் சைக்கிள் உதிரிப் பாகங்களா ★ ஜெனரேற்றர் வகைகளா
★ மின் உபகரணங்களா அனைத்தையும்
நியாய விலையில் பெற்றிட



## பாலவிநாயகர் மோட்டோர்ஸ்

இல (1) 8, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(கி-1666)

நாட்டு மக்கள் அனைவரும் சாந்தி, சமாதானம், சுபீட்சம் பெற்று வாழ
இப் புத்தாண்டு தினத்தில் வாழ்த்துகின்றோம்
உங்களது நயம், நம்பிக்கை, நாணயமுள்ள தங்க வைர நகைகளுக்கு சிறந்த ஸ்தாபனம்



## நியூ விதுஷா நகைமாடம்

191 H. K. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(ஓடர் நகைகள்குறித்த தவணையில்
22 கரட் தங்கத்தில் செய்து கொடுக்கப்படும்)

கிளை நிறுவனம்:-
விதுஷாயினி நகைமாடம் சுருவில் வீதி, ஊர்காவற்துறை (கி-1672)

## இன்று ஒரு தகவல்

# பெருமை பேசிடப் பேரவா

மல்லிகைச் செடியில் அன்றலர்ந்த மல்லிகைப்பூ வாசனை பரப்பி நின்றது: வளமான தோற்றம் புத்தம் புதியதாய் வெள்ளை வெளேரென வண்ண முகம் காட்டி தென்றலொடு தேமதுரம் பொழிந்தது.

இந்த இனிய வேளையில், தனது பெருமைகளையெல்லாம் யாரிடமாவது சொல்லித் தன்னைத் தானே புகழ வேண்டும் என்ற ஆசை எழுந்தது.

இவ் உலகத்திற்கே வாசனையையும் வடிவழகையும் கொடுக்கத் தன்னை விட்டால் ஆள் இல்லை என்று எண்ணிய இளம் ,பூசற்றுமுற்றும் நோட்டம் விட்டது,

இன்னொன்று வாடிவதங்கி வளமான இளமையைப் பறிகொடுத்து தன் இறுதிக் காலத்தை நெருங்கி நிலத்திற் கிடந்தது.

அதனைப் பார்த்து, நீஏன் இப்படி வாடிய முகத்துடன் அழகெல்லாம் செட்டு தலையைத் தாழ்த்தி நிலம் பார்க்கிறாய்? என்னைப் போல, இந்த உலகத்தை நேரிய பார்வை பார்க்க உன்னில் ஏன் இயலவில்லை, ஒன்றுக்கும் உதவாத இந்த வாழ்வு உனக்குத் தேவைதானா?' என்று சற்றே மமதையோடு கேள்விமேல் கேள்வி தொடுத்தது.

நிலத்தில் கிடந்த பூமிகவும் தன்னடக்கத்துடன் மெல்லிய புன்சிரிப்பை உதிர்த்து 'காலம் உனக்குப் பதில் தரும்' என்று கூறி, மேலும் கதையை வளர்க்க விரும்பாது வேறெங்கோ பார்வையைச் செலுத்தியது.

இளம் பூவுக்குச் சிரிப்புத் தாங்க இயலவில்லை. தன்னுடைய வீரப்பிரதாபங்களையும் நிலத்தில் கிடந்த பூவின் இயலாத்தனங்களையும் யாரிடமேனும் கொட்டியளக்கும் ஆசையில் வேறெங்கோ எட்டி எட்டிப் பார்த்தது.

மறுநாட் பொழுது புலர்ந்தது. நேற்று மிடுக்குடன் கதைபேசிய மல்லிகைப்பூ புளுதி மேனியதாய் மண்ணில் கிடந்தது.

புத்தம் புதிய மல்லிகை மலரொன்று ஏளனத்துடனும் பச்சாத்தாபத்துடனும் அதனைக் குனிந்து நோக்கி இவ்வாறு கூறியது.

'காவோலைகள் விழும் போது சிரித்தன என்பதற்காய் குருத்தோலைகள் காவவோலைகள் ஆகாது இருந்து விட முடியாது.

ஊனா

## வலி.வடக்கு பிரதேசசெயலர் பிரிவில்

# வன்செயல்களால் 55 குடும்பங்கள் குடும்பத் தலைவரை இழந்து தவிப்பு

(தென்மராட்சி)

வலிகாமம் வடக்கு பிரதேச செயலர் பிரிவில் தற்போது இயங்குகின்ற 17 கிராம சேவையாளர் பகுதிகளில் மொத்தமாக 605 விதவைக் குடும்பங்கள் இருப்பதாகக் கணக்கெடுப்புகள் மூலம் தெரியவந்துள்ளது.

இவற்றில் வன்செயல்களால் 55 குடும்பங்களும், விபத்துக்களால் 54 குடும்பங்களும், இயற்கை மரணம் காரணமாக 473 குடும்பங்களும், காணாமல் போனமையினால் 9 குடும்பங்களும், வேறு காரணங்களினால் 14 குடும்பங்களும் குடும்பத் தலைவரை இழந்துள்ளன.

இவர்களுள் 40 வயதுக்குட்பட்டவர்கள் 56 பேரும், 40 - 60 வயதுக்கு இடைப்பட்டவர்கள். 243 பேரும், 60 வயதுக்கு மேற்பட்டோர் 316 பேரும் விதவைகளாகியுள்ளனர்.

[உ-77]

## உறுதியான அரசியல்சூழல் உருவாக

# ஒவ்வொருவரும் பங்களிப்பு நல்க புதிய ஆண்டு வழிகாட்டுவதாக

(யாழ்ப்பாணம்)

இம்முறை புத்தாண்டு காலத்தை முன்னிட்டு யுத்த நிறுத்தப் பிரகடனத்தை அரசாங்கம் வெளியிட்டுள்ளமை அமைதியையும் சமாதானத்தையும் விரும்பும் மக்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியை ஊட்டும் என்பதில் ஐயமில்லை.

அரசு அறிவித்துள்ள 5 நாள் யுத்தநிறுத்த அறிவிப்பு தொடர்பாக ஈ.பி.டி.பி. அமைப்பின் செயலாளர் நாயகம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா விடுத்துள்ள பத்திரிகைச் செய்தியில் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அச்செய்திக் குறிப்பில்மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

இலங்கையின் இனப்பிரச்சனைக்கு தீர்வு காணக்கூடிய ஆரோக்கியமான அரசியல் பேச்சுக்கள், சம்பந்தப்பட்ட சகல தரப்போடும் முன்னெடுக்கப்பட்டு ஆக்க பூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதே இப் புத்தாண்டில் எமது எதிர்பார்ப்பாகும்.

எனினும் தமிழ்பேசும் மக்களின் ஜனாநாயக அரசியல் உரிமை வெளிப்பாடுகள் நிலை நிறுத்தப்படும் என்னும் உத்தரவாதமும் போர்ச்சூழல் சுமத்தியுள்ள அன்றாடக் கெடுபிடிகள் அகற்றப்படும் நிலைமையுமே இயல்பு நிலை திரும்புவதற்கான முதற்படியாகும்.

இயல்பு நிலைமைகள் விரைவில் திரும்புவதற்கும் தற்போதைய அமைதிநிலை தொடர்ந்தும் நிலைபெறவும் உறுதியான அரசியற் சூழல் உருவாகவும் ஒவ்வொருவரும் தத்தம் பங்களிப்பை நல்குவதற்கு இப்புத்தாண்டு வழிகாட்டுவதாக அமையட்டும்.

பிறந்துள்ள விஷு வருடமானது ஐக்கிய இலங்கைக்குள் சமாதான சகவாழ்வு என்னும் மக்களின் எண்ணத்தைச் சாதிப்பதற்கான திடசித்தத்தை ஒவ்வொருவருக்கும் ஊட்டுவதாகட்டும். என்று குறிப்பிடப்பட்டுள்ளார்.

(உ)

# ஆசிய விளையாட்டு போட்டிகள் இலங்கையில்

(சுண்டுக்குளி)

2002 ஆம் ஆண்டில் ஆசிய மெய்வல்லுநர் போட்டிகள் இலங்கையில் நடைபெறவிருப்பதாக அமைச்சர் பிரியதர்சனயாப்பா தெரிவித்துள்ளார்.

இப் போட்டிகளில் 43 ஆசிய நாடுகளைச் சேர்ந்த 550 வீரவீராங்கனைகள் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதே சமயம், போட்டிகள் இங்கு நடைபெறுவதானால் 22.5 கோடி ரூபாய்கள் செலவாகுமென்றும், வருவாய் அதைவிட பல மடங்காய், இருக்கும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

(உ-110

# உத்தியோகத்தர் 12 பேர் விபத்தில் படுகாயம்!

(கொழும்பு)

கொழும்பு சுகததாஸவிளையாட்டரங்கிற்கு அருகில் நேற்று முன்தினம் அதிகாலை இடம்பெற்ற வாகன விபத்தொன்றின்போது ஜனாதிபதியின் பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்த 12 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

ஜனாதிபதிக்கு கட்டுநாயக்கா விமான நிலையம் வரை பாதுகாப்புவழங்கிவிட்டுதிரும்பும்போதுபாதுகாப்புப்பிரிவை சேர்ந்தவர்கள் பயணம் செய்த வாகனமும்கொள்கலன் ஏற்றிவந்தவாகனமும் ஒன்றுடன்ஒன்று மோதியதாலே இவ் விபத்து நேர்ந்துள்ளதாக கிராண்ட்பாஸ் பொலிசார்தெரிவித்துள்ளனர்

இவ் விபத்தின் போதுகாயமுற்றபன்னிருவரும்கொழும்பு தேசிய வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் ஒருவரின் நிலைகவலைக்கிடமாக உள்ளதாக பொலிஸ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

(ம-4)

# பஸ்ஸின் அடியில் ஒழிந்து தப்பிய இராணுவத்தினர்

(கொழும்பு)

இராணுவத்திலிருந்து தப்பிய இரண்டு சிப்பாய்கள் பஸ்ஸின் அடிப்புறத்தில் ஒழித்திருந்து இருபது மைல் தூரம் பயணம் செய்த சம்பவம் மடுவில் ஓயாப் பகுதியில் இடம் பெற்றுள்ளது.

இராணுவத்தில் புதிதாக இணைந்து பயிற்சிகளை முடித்துக் கொண்ட இவ்விரு இராணுவச் சிப்பாய்களும் ஆஸ்பத்திரி ஒன்றில் சிகிச்சைக்காக சென்ற சமயம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

(செ)

# 65வயதுமேற்பட்டோருக்கு விசேடஅடையாளஅட்டை

(கொழும்பு)

அறுபத்தைந்து வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு விசேட அடையாள அட்டைகளை வழங்குவதற்கு சமூகசேவைகள்திணைக்களம்நடவடிக்கை எடுத்துள்ளது.

அறுபத்தைந்து வயதுக்கு மேற்பட்டவர்கள் தத்தமது பிரதேசசெயலர்கள் மூலமாக முத்திரைஅளவிலான இரண்டு படங்களுடன் விண்ணப்பிப்பதன் மூலம் இவ் அடையாள அட்டைகளை பெற்றுக்கொள்ளலாம் என சமூக சேவைகள் திணைக்கள பணிப்பாளர் என்.ரி.பத்திரனா தெரிவித்துள்ளார்.

இந்த விசேட அடையாள அட்டை வைத்திருப்போருக்கு சுகாதாரம், போக்குவரத்து, விடுதிகள், மற்றும் அரசஅலுவலகங்களில் முன்னுரிமை வழங்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(வ-4)

## பாராளுமன்றில் பெண்களுக்கு

# தனி அமைப்பு

(கொழும்பு)

பெண்களுக்கான பாராளுமன்ற அமைப்பொன்றை மகளிர் விவகார அமைச்சர் அண்மையில் ஏற்படுத்தியுள்ளார்.

இந்த அமைப்பில் அரசாங்கம் மற்றும் எதிர்க்கட்சி பெண் அங்கத்தவர்கள் இடம் பெறுவதுடன் இவர்கள் மகளிர் நலன்களுக்காச் செயற்படவுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(உ-5)

# ஈ..பிடி.பி. அழைப்பு

(யாழ்ப்பாணம்)

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தில் வேலை வாய்ப்புக்காக விண்ணப்பம்செய்துநேர்முகப்பரீட்சைக்கு தோற்றிய போதும் இதுவரை பொலிஸ் பாதுகாப்பு அனுமதி கிடைக்கப்பெறாத 13 பேரை எதிர்வரும்16ம்திகதி திங்கட்கிழமை காலை 10 00 மணிக்கு யாழ் மாவட்ட ஈ.பி.டி.பி அலுவலகத்திற்கு வருமாறு ஈ.பி.டி.பி யாழ்மாவட்ட உதவி அமைப்பாளர் நிஷாந்தன் கேட்டுள்ளார்.

எஸ்.ராஜ்குமார்(யாழ்ப்பாணம்), கு.மனோகரன்(உடுப்பிட்டி), சி.சிவநேசன்(கொடிகாமம்), பா.ஜெயக்குமார் (நல்லூர்), க ஞானவேல்(கரவெட்டி), மா.அசோக்குமார் (வட்டுக்கோட்டை), நா.சசிக்குமார் (அராலி), என் ஜெகதீஸ்வரன்(வரணி), செ.தர்மராஜா(சித்தன்கேணி) மு.சிவரத்தினம்(வல்வெட்டித்துறை) ஐ.சிவநேசன் (வட்டுக்கோட்டை), கு.சந்திரகுமார் (கைதடி), ரீ.கணேசலிங்கம் (மானிப்பாய்)ஆகியோரே ஈ.பி.டி.பியினரால் அழைக்கப்பட்டவர்களாவர்.

[இ]

# மன்னார்சம்பவத்திற்கு யாழ்.ஊடகவியலாளர் சங்கம் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

மன்னார் பகுதியில் இரண்டு தமிழ்ப் பெண்கள் படையினரால், கோரமாக பாலியல் வல்லுறவிற்கு உள்ளாக்கப்பட்டமையினையும், இச்சம்பவம் தொடர்பான செய்திகளை சேகரித்து அச்செய்திகளை வெளியிட்ட தினக்குரல் பத்திரிகையின் மன்னார்ப் பகுதிப் பிராந்தியச் செய்தியாளரான பஸ்மி படையினர் விசாரணைக் குட்படுத்தியதுடன் அவரைத் தொலைபேசியில் எச்சரித்துள்ளமையினையும், யாழ். ஊடகவியலாளர் சங்கம் வன்மையாக கண்டித்துள்ளது.

இது தொடர்பாக யாழ்.ஊடகவியலாளர் விடுத்தசெய்திக் குறிப்பில், பிற நாடுகளில் செய்தி ஊடகவியலாளர்கள் ஊக்குவிக்கப்பட்டு வரும் சூழ்நிலையில், இலங்கையில் ஊடகத் துறையினர் படுகொலை செய்யப்படுவதும், தாக்கப்படுவதும் எச்சரிக்கப்படுவதும் தொடர்கின்றது.

இத்தகைய அநாகரீகமான செயல்களை தடுத்து நிறுத்த ஜனாதிபதி அவர்களும், ஊடகத்துறை அமைச்சரும், சர்வதேச உலகும் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கின்றோம் என்றுள்ளது.

(உ-43)

## விடுமுறைக்காக மூடப்பட்டது

(வண்ணார்பண்ணை)

யாழ். உயர் தொழில்நுட்ப நிறுவனம் பகல்நேர மாணவர்களுக்கு கடந்த 6 ஆம் திகதியும் மாலை நேர மாணவர்களுக்கு 8 ஆம் திகதியும் முதலாம்தவணைவிடுமுறைக்காக மூடப்பட்டுள்ளதாக நிறுவன இயக்குநர் தெரிவித்துள்ளார்.

மீண்டும் அடுத்தமாதம் 2 ஆம் திகதி பகல்நேர மாணவர்களுக்குவகுப்புகள் ஆரம்பமாகும் என்றும், மாலைநேர மாணவர்களுக்கு6 ஆம்மாதம் 5 ஆம் திகதி வகுப்புக்கள் ஆரம்பமாகும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(க-109)

# தீவகப் பாடசாலைகளுக்கு பகுதிநேர ஆங்கிலஆசிரியர் படிவம் அனுப்பி வைப்பு

(வண்ணார்பண்ணை)

தீவக வலயப் பாடசாலைகளில் பகுதிநேர ஆங்கிலஆசிரியர்களாக கடமையாற்றும் ஆசிரியர்களிடம் இருந்து தீவக வலய கல்வி அலுவலகத்தினர் பகுதிநேர ஆங்கில ஆசிரியர் விபரத்தினை பெற்றுக் கொள்ளக்கூடியதான படிவத்தினை ஒவ்வொரு பாடசாலைக்கும் அனுப்பியுள்ளனர்.

அப்படிவத்தினை பூர்த்தி செய்தும், ஒவ்வொரு ஆசிரியர்கள் தொடர்பான சுயவிபரத்தினையும் தனித்தனியாக அனுப்புமாறு கேட்டுள்ளனர்.

ஆங்கில ஆசிரியர் பயிலுநர் பதவிக்கான அடிப்படை தகுதியாக க.பொ.த [சா/த] தரத்தில் பூரணமாக சித்தி பெற்றிருப்பதுடன் ஆங்கிலத்தில் விசேட சித்திபெற்றிருத்தல் வேண்டும்.

க.பொ.த [உ/த] த்தில் ஒரே தடவையில் 3 பாடங்களிலும் சித்தியடைந்திருத்தல் வேண்டும் என்றும் அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

[க-109]

## புத்தாண்டுச் செய்தி

தமிழ்- சிங்களப் புத்தாண்டில் நாட்டில் போர் ஓய்ந்து சமாதானம் ஏற்பட்ட திரிகரண சுத்தியோடு அனைவரும் செயற்படுவோமாக.

மாபெரும் அழிவுகளையும் உயிரிழப்புகளையும் ஏற்படுத்தியுள்ள யுத்தம் முடிவுக்கு வந்து நாட்டில் சமாதானம் ஏற்பட நோர்வே அரசின் அனுசரணையுடன் மேற்கொள்ளப்பட்டு வரும் சமாதான முயற்சி வெற்றியளிக்க வேண்டும் என்பதே அனைத்து மக்களின் பெருவிருப்பாகும். இம்முயற்சியின் வெற்றிக்காக சகல தரப்பிலும் எத்தனையோ உள்ளங்கள் ஏங்கி நிற்பதை எவரும் மறந்து விட முடியாது.

நடைபெறும் போரில் தமிழ் மக்களும் சிங்களமக்களும் உயிரிழக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருப்பதை எண்ணி மிகுந்த மனவேதனை அடைகிறோம்.

புத்தாண்டில் இத்தகைய கொடூரச் சம்பவங்கள் நடைபெறாதிருக்க இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நடைபெறவிருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுவார்த்தை வெற்றி பெற எல்லாம் வல்ல ஸ்ரீ பார்வதி சமேத பரமேஸ்வரனைப் பிரார்த்திக்கின்றோம்.

இந்து சமயப் பேரவை
யாழ்ப்பாணம்.

## புத்தாண்டில் சாந்தி சமாதானம் மலரட்டும்

மலரும் விஷு வருடமானது இன்னலுற்றிருக்கும் தமிழ் மக்கள் வாழ்வில் நிலையானதொரு அமைதியை ஏற்படுத்தி போரின் கொடுமையால் தவிக்கும் மக்கள் வாழ்வில் நம்பிக்கை ஒளி ஊட்டுவதாக அமைய வேண்டும்.

எம்மவர்கள் கவலைகளை நீக்கவும் எம் பிரதேசம் வளம் மிக்கதாகவும், வறுமை நீங்கி வனப்புடன் திகழவும் புதிய ஆண்டு வழிசமைக்க வேண்டும்.

நாட்டில் சாந்தி சமாதானம் மலர அனைவருக்கும் மகிழ்வு தர இறைவனை வேண்டுகின்றோம்.

இந்து மாமன்றம்
வடமாநிலம்

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையார்கள் அனைவருக்கும் எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்!

மோட்டார் சைக்கிள் வகைகள் அதற்கான உதிரிப்பாகங்கள் நியாய விலையில் பெற்றுக்கொள்ள!

ஹரிணி ஹாட்வெயர்

164, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(கி-1686)

மலரும் புத்தாண்டு அனைவருக்கும் மகிழ்வைக் கொண்டுவர வாழ்த்துகின்றோம்.

தங்கநகை உலகில் தமக்கென தனியான இடத்தைப் பெற்றவர்கள்.
நாளைய நாகரிகத்தின் இன்றைய முன்னோடிகள்.

சிறி கருமாரி நகையகம்

177D, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(வின்சர் தியேட்டர் முன்பாக)
(கி-1990)

அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் எமது புதுவருட வாழ்த்துக்கள்!
வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட அனைத்து வகைஆடைகளையும் உங்கள் மனத்திருப்தியுடன் பெற்றுக்கொள்ள யாழ்நகரிலே என்றும்புதுப்பொலிவுடன் திகழ்ந்துகொண்டிருக்கும் ஒரே கைராசியான ஸ்தாபனம்

ஸ்ரீ ராம் ஆடையகம்

5/23 (48) நவீனசந்தை, யாழ்ப்பாணம்.
(கி/1803)

காரைநகர் வாரிவளவு கற்பக விநாயகர்

தேர்த்திருவிழா



(14 - 04 - 2001)

தீராத வினைதீர்க்கும் வேளமுகத்தோனே
வாரிவளவு உறை கற்பக விநாயகனே!
தேரேறி வந்திங்கு துன்பம் போக்கி
தேசத்தில் நிலையான அமைதியை
தாருமையா



தேரேறிவரும் கற்பக விநாயகரின் திருவருளை வேண்டிநிற்கும்

இ. ச. பேரம்பலம் சக நிறுவனம்

இல: 50, 52, 54, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P:- 021- 2988 Fax:- 021- 2368

கஜமுகன் ஹாட்வெயர்

இல:- 147,149 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
T.P:- 021 - 2833

# புத்தாண்டுச் சிறப்பு மலர் - 2001


எரிக்கணேஷின் அன்பு நெஞ்சங்களுக்கு இனிய
புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்

சீன முறையில் சிறப்புத்தேர்ச்சி பெற்றவரால்
சிறந்த தரமான சங்குப் பற்கள் அழகிய முறையில்
கட்டிக் கொடுக்கப்படும். மற்றும் சிறப்பான முறையில்
மிதப்புப் பற்களுக்கு கிளிப் செய்து கொடுக்கப்படும்
கண் பரிசோதித்து கண்ணாடி வழங்குபவர்கள்,



**எரிக்கணேஷ்**

566, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T. P. No: 2486

**கிளை**
91, கே. கே. எஸ். வீதி,
கொக்குவில் சந்தி,
கொக்குவில்.

[கி-1696]

அனைவருக்கும் எமது புத்தாண்டு
நல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

சுத்தமானதும் சுகாதார அங்கீகாரம்
பெற்றதுமான அல்பா மிக்சரை மொத்த
மாகவும், சில்லறையாகவும் பெற்றுக்
கொள்ள

**அல்பா மிக்சர்**

பலாலி வீதி, பரமேஸ்வராச் சந்தி,
யாழ்ப்பாணம்.

கிளை நிறுவனம்:- அல்பா மிக்சர்
சங்கானைச் சந்தி,
சங்கானை.

உற்பத்தி நிலையம்:- 'பைக்கேஸ் லேன்'
மானிப்பாய்.

(கி/ 1812)

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்

தொலைத் தொடர்பு, போட்டோப்பிரதி, லெமனேற்றிங்
சேவைகளில் முதன்மை நிறுவனம்

**திருப்பதி**

யாழ் வீதி, மானிப்பாய்.
T.P. 2757, 3197, 3143

[கி-1698]

அனைவருக்கும் இனிய புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்
குளிர்பான வகைகள், வாசனைத் திரவியங்கள்
என்பவற்றை பெற்றுக்கொள்ள

**ஸ்ரீகாந் எசன்ஸ்**
**அன்**
**குறோசறீஸ்**

161(A), கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்
T. P. 2219

(கி/1699)

மானிநகர் உறை மருதடி விநாயகனே
உமதருள் வேண்டும் அடியார் நாயகனே!
வினைகளெல்லாம் களையும் மூத்தோனே!
சோதனைகள் போது மய்யா, அமைதியை தாருமய்யா!

என இச்சித்திரைப் புத்தாண்டு தினத்தில் ரதமேறி பவனிவரும் மானிப்பாய் மருதடி விநாயகனை இறைஞ்சி நிற்கும்

"சுந்தர்சன்" ஸ்தாபனத்தினரும் ஊழியர்களும்
மத்திய சந்தை முன்பாக மானிப்பாய்.

★ மின்சார உபகரணங்கள் ★ மின்நீர் இறைக்கும் இயந்திரங்கள்
★ மின் அலங்காரப் பொருட்கள் ★ மின்சார சோடனைப் பொருட்கள்
★ மின் அழுத்தி பலரக மின் குமிழ்கள் ★ மின் விசிறிகள்
★ மின்சார சமையலறை உபகரணங்கள் ★ குளிர் சாதனப் பொருட்கள்
★ பரிசுப் பொருட்கள் ★ சுவர் மணிக்கூடுகள் ★ பி.வி.சி பைப்பு வகைகள் இணைப்புகள் இன்னும் பல பொருட்களை

நிதானம் நியாயம் உத்தரவாதத்துடன் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளக் கூடிய ஒரே ஸ்தாபனம்.

**'சுந்தர்சன்'**

மத்திய சந்தை முன்பாக,
பிரதான வீதி, மானிப்பாய்.
T. P. 2751 FAX: 2751

(கி-169[illegible])


## விடிவு ஒன்றே மலரட்டும்

கிழக்கிலே விடியல் தோன்றி
கீழ்மை நிலை போகும்படி
வரம்பிலே பாடல் கொட்டி
வகையுறு இன்பம் பொங்க
நினைப்பிலே தோன்றும் காட்சி
நித்தியமாய் அமைந்திட எண்ணி
நாட்டிலே நன்மைகள் பொங்க
இன்தமிழ் ஆண்டே வருக

தென்றல் வந்து தலை துவட்டும்
தேன்களிச் சோலையில் இனி
போர்கள் ஒழிந்து போகட்டும்
புதிய தீர்வு மலரட்டும்
கொன்றல தூவும் மலர்களாய்
இன்பம் பூத்து நாட்டில்
வேர்கள் கூட நனையட்டும்
விடிவு ஒன்றே மலரட்டும்

கு. ரஜீபன்
ஏழாலை மேற்கு

## அடிமைகள் நீங்கும் புத்தாண்டாக மலரட்டும்

சுதந்திரவாழ்வு காண உழைக்கின்ற தமிழர்களுக்கு உதவுகின்ற ஆண்டாக புத்தாண்டு விளங்க வேண்டுமென அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தலைவர் அ. விநாயகமூர்த்தி தனது புத்தாண்டுச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

தடையெல்லாம் அகன்று, தமிழர்கள் கைவிலங்கு உடையவும், தாய்க்குலம் சிந்துகின்ற கண்ணீர் அவலம் நீங்கி அனைவரும் சுபீட்சமாக வாழ புத்தாண்டில் பிரார்த்திப்பதாகவும் அச்செய்தியில் தெரிவித்துள்ளார். (இ)

# குவைத் நாட்டு பெண்களிடையே உதைபந்தாட்டப் போட்டி

## ஆண்கள் பார்க்க அனுமதியில்லை

(குவைத்)
குவைத் நாட்டில் பெண்களுக்கிடையிலான உதைபந்தாட்டப் போட்டி ஒன்று நடத்தப்பட இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், மேற்படி போட்டியைக்கண்டுகளிக்க ஆண்களுக்கு அனுமதி வழங்கப்படாது எனவும் இப்போட்டி முற்றுமுழுதாக பெண்களின் கண்காணிப்பிலேயே நடைபெறும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ் உதை பந்தாட்டப் போட்டி உள்ளக விளையாட்டு அரங்கிலேயே நடைபெறும்.

குவைத் நாட்டில் வசிக்கும் பெண்கள் உரிமைகள் பலவும் மறுக்கப்பட்டு அடக்கப்பட்ட இனமாய் வாழ்ந்து வரும் இவ் வேளையில் விளையாட்டுப் போட்டிகளில் பங்கு கொள்வதற்கான அனுமதி வழங்கப்பட்டிருப்பது குறித்து பலரும் ஆச்சரியம் தெரிவிக்கப்பட்டுள்ளனர். (உ-9)

# இருபத்து மூன்று ஆண்டுகளின் பின் பீஹாரில் பஞ்சாயத்துத் தேர்தல்

[புதுடில்லி]
இருபத்து மூன்று ஆண்டுகளுக்குப் பின் பீஹாரில் பஞ்சாயத்துத் தேர்தல் நடைபெறுகிறது.

முப்பத்து மூன்று மாவட்டங்களில் நடைபெறும் இத்தேர்தல் ஆயிரத்து இருநூறு பஞ்சாயத்துக்குரியதென்று தெரிவிக்கப்படுகிறது.

இத் தேர்தலையொட்டி நாட்டில் குழப்பங்கள் இடம்பெறலாம்மென்று பாதுகாப்பு மிகவும் பலப்படுத்தப்பட்டுள்ளது. ஆற்றுப்பகுதிகளிலும் காட்டுப்பகுதிகளிலும் கிராமப்புறங்களிலும் படைகள் உசார்ப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இந்தியாவிற்கும் நேபாளத்திற்குமான நெடுஞ்சாலைகள் மூடப்பட்டுவிட்டன.

தொடரும் பஞ்சாயத்துத் தேர்தல் இம்மாதம் முப்பதாம் திகதிவரை நடைபெற இருப்பதாக அரசு அறிவித்துள்ளது. [து]

### ஜெயலலிதா

# தாக்கல் செய்த மனுவை உயர் நீதிமன்றம் நிராகரித்தது

## தேர்தலில் போட்டியிடுவது சாத்தியமில்லை

[சென்னை]
ஜெயலலிதாவைக் குற்றவாளியெனத் தீர்ப்பளித்த தனி நீதிமன்றத்தின் தீர்ப்பினை நிறுத்தி வைக்கவேண்டுமெனக் கோரி ஜெயலலிதா உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவினை உயர்நீதிமன்ற நீதிபதி மறை சுப்பிரமணியன் நிராகரித்துள்ளார்.

தனி நீதிமன்றத்தின் மேற்படி குற்றச் சாட்டு இருக்கும் வரை தான் தேர்தலில்போட்டியிட முடியாது என்ற அச்சத்தின்காரணமாகவே ஜெயலலிதா மேற்படி மனுவினை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார்.

எனினும் அவரதுமனுவினை உயர்நீதிமன்றம் ஏற்கமறுத்துவிட்டது.

உயர் நீதிமன்றத்தின் மேற்படி நடவடிக்கை அ.இ.அ.தி.மு.க கூட்டணி வெற்றி பெற்றாலும் ஜெயலலிதா ஆட்சி அமைக்க முடியுமா என்ற சந்தேகத்தை மக்களின் மனதில் தோற்றுவித்துள்ளதாக அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர். [உ-9]

### இந்தோனேஷிய உபஜனாதிபதி

# ஜனாதிபதி பதவியை பொறுப்பேற்க 3 நிபந்தனைகளுடன் இணக்கம்

[ஜகார்த்தா]
இந்தோனேஷிய ஜனாதிபதி வாஹிட்டுக்குப் பதிலாக அப்பதவியைப் பொறுப்பேற்கவேண்டுமாயின் தனது மூன்று நிபந்தனைகளுக்கும் அதிகாரிகள் ஒத்துழைக்க வேண்டுமென அந்நாட்டின் உபஜனாதிபதி மேகவதி சுவர்ணோபுத்ரி அறிவித்துள்ளார்.

தனதுபதவிக்காலம்முடியும் வரை எவரும் தனக்குச் சவாலாக இருக்கக் கூடாது, உப ஜனாதிபதி பதவி தொடர்ந்து வெற்றிடமாகவே இருக்கவேண்டும், ஜனாதிபதிகளை நியமிக்கவும், பதவி நீக்கவும் அதிகாரம் கொண்ட உயர் பாராளுமன்ற ஆண்டுச்கூட்டம் கைவிடப்பட வேண்டும் என்ற 3நிபந்தனைகளை உபஜனாதிபதி சுவர்ணோபுத்ரி விதித்துள்ளார்.

மேற்படி நிபந்தனைகளுக்கு முக்கிய அரசியல் தலைவர்கள் இணக்கம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-9)

### த.மா.காவின் ஆதரவு தொகுதிகளை

# மீளக் கைப்பற்றுவது குறித்து உட்கட்சி கூட்டம் விரைவில்

(சென்னை)
சென்ற சட்டசபைத் தேர்தலில் தா.மா.கா வெற்றி பெற்ற 21 தொகுதிகளையும் இம்முறை அ.இ.அ.தி.மு.க அபகரித்ததை அடுத்து அக்கட்சியினர் கொதித்துப் போயுள்ளதாக விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மேற்படி 21 தொகுதிகளையும் தாம் அ.இ.அ.தி.மு.கவிடம் மீளக் கோருவது தொடர்பான பேச்சுவார்த்தை ஒன்றை ஜெயலலிதாவுடன் த.மா.கா விரைவில் நடத்தவுள்ளதாக அக்கட்சியின் பொருளாளர் டி. சுதர்சனம் தெரிவித்துள்ளார்.

மேற்படி விடயம் தொடர்பாக தமிழ் மாநிலக் காங்கிரஸ் கட்சியின் உறுப்பினர்களிடையே கூட்டம் ஒன்று அதன் தலைவர்மூப்பனார் தலைமையில் நடைபெற இருப்பதாகவும் அக்கூட்டத்தில் அ.இ.அ.தி.மு.க வினது இத்தொகுதி அபகரிப்புத் தொடர்பாக ஆராயவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-9)

### விளையாட்டரங்கில்

# அலைமோதிய ரசிகர் கூட்டம் நெரிசலில் சிக்கிய 47 பேர் பலி

தென்னாபிரிக்காவில்உள்ள அரங்கொன்றில் நேற்று முன் தினம் நடைபெற்ற கால்பந்தாட்டப்போட்டியின் போது பார்வையாளர்களுக்கிடையே ஏற்பட்ட நெரிசலில் சிக்கி 47 பேர் உயிரிழந்துள்ளனர்.

இரண்டு முக்கிய அணிகள் பங்குபற்றிய கால்ப்பந்தாட்டத்தின் போது, அலை அலையாக வந்த ரசிகர் கூட்டம் உணர்ச்சி மிகுதியால் விளையாட்டரங்கில் நுழைய முயன்றதாகவும், அதனைத் தடுக்க பொலிஸார்கண்ணீர்ப்புகைக் குண்டு வீசியதால் ஏற்பட்ட கடும் நெரிசலில் சிக்கி, 47 பேர் உயிரிழந்துள்ளதாக தெரியவந்துள்ளது.

68 ஆயிரம் பேர் தங்கக் கூடியஇவ் அரங்கில் சுமார் ஒரு இலட்சத்துக்கும்மேற்பட்டோர் கலந்து கொண்டனர் என்பதுகுறிப்பிடத்தக்கது.-9

### பா.ம.கவுக்கு 27தொகுதிகள்

# ஜெயாவின் அறிவிப்புக்கு கூட்டணிக்குள் எதிர்ப்பு

[சென்னை]
வரவிருக்கும் சட்ட சபைத் தேர்தலில் அ.இ.அ.தி.மு.க தலைமையிலான கூட்டணியில் போட்டியிடும் பா.மா.கவுக்கு 27 தொகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளதாக செல்வி ஜெயலலிதாவினால் அறிவிக்கப் பட்டுள்ளது.

த.ம.கா, காங்கிரஸ் உட்பட ஏனைய கூட்டணிக் கட்சிகள் தமக்கு உரிய இடங்கள் எதுவும் தரப்படவில்லையெனகுரல் எழுப்பும் அதேவேளை, ஜெயலலிதாவின் தொகுதிப்பங்கீடு குறித்து அறிவிப்பு மேற்படி கட்சிகளுக்கு கடும் சினமூட்டியுள்ளதாகத் தகவலறிந்த வட்டாரங்கள் கருத்து தெரிவித்துள்ளன. [உ-9]

# விமானத்திற்குள் வைத்து தங்க கட்டிகள் திருட்டு

(லண்டன்)
டுபாயில் இருந்து கொழும்புக்கு விமான மூலம் பிரபல வர்த்தகர் ஒருவரால் அனுப்பி வைக்கப்பட்ட பெறுமதியான தங்கக் கட்டிகள் திருடப்பட்டுள்ளன.

22 மில்லியன் ரூபா பெறுமதியான தங்கப் பாளங்களும் 11 மில்லியன் பெறுமதியான 130தங்கப்பாளக்கட்டிகளும் விமானத்தில் வைக்கப்பட்டே களவாடப்பட்டுள்ளது என தெரிய வருகிறது.

இது தொடர்பாக விமானி மற்றும் விமானநிலைய அதிகாரிகள் மத்தியில் துரித விசாரணைகள் இடம்பெற்று வருவதாக விமான நிலையச் செய்திகள் தெரிவித்துள்ளன. [க-07]

# பாக்.இராஜதந்திரி வெடிப் பொருளுடன்கைது

(காட்மண்டு)
பாகிஸ்தான் ராஜதந்திரி ஒருவர் சக்திவாய்ந்த வெடி பொருட்களுடன் நேபாளப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேற்படி பாகிஸ்தான் அதிகாரியும் அவரது மனைவியும் சக்திவாய்ந்த 16 கிலோ வெடிமருந்துடன் காட்மண்டு விமான நிலையத்திற்கு செல்ல ஆயுத்தமாக இருந்த சமயம் அவர்கள் குடியிருந்த வீட்டில் புகுந்த நேபாளப் பொலிஸார் அவர்களைக் கைது செய்துள்ளனர்.

விசாரணைகள் முடிந்த பின்பு இவர்கள் நாடுகடத்தப் படவுள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் கூறுகின்றன. [க-9]

### பீஹார் மாநிலத்தில்

# தேர்தல் வன்முறைகள் பதினைந்து பேர் பலி

[புதுடில்லி]
பீஹார் மாநில பஞ்சாயத் தேர்தலில் ஏற்பட்டவன் செயல்களால் பதினைந்து பேர் கொல்லப்பட்டனர்.

பலத்தபாதுகாப்புநடவடிக்கைகள்ஏற்படுத்தபடடபோதிலும் பல மாவட்டங்களில் தேர்தல் வன் முறைகள்இடம் பெற்றுள்ளன.

வாகனங்கள் தீக்கரையாக்கப் பட்டும் வாக்குச் சாவடிகள் எரிக்கப்பட்டும் வாக்குப் பெட்டிகள் சூறையாடப் பட்டும் வன்முறைகள் உச்சக் கட்டத்தில் இடம் பெற்றுள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

முப்பதாம் திகதி வரை தேர்தல் நடை பெறவிருப்பதால் வன் முறைகள் இன்னும் தொடரலாம் என்று அஞ்சப் படுகிறது. (து)

# கொக்குவில் இந்துவில் இன்று கலைக்கதம்பவிழா

நல்லூர் பிரதேச சபையினரால் புத்தாண்டை முன்னிட்டு நடத்தப்படும் மாபெரும் கலைக்கதம்ப விழா இன்று பிற்பகல் இந்துக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

நல்லூர் பிரதேச சபைத் தலைவர் க. மணிபல்லவராஜன் தலைமையில் நடைபெறும் மேற்படி நிகழ்வில் யாழ் அரச அதிபர் க சண்முகநாதன் பிரதம விருந்தினராக கலந்து கொள்கின்றார்.

வலி மேற்கு பிரதேசசபைத் தலைவர் ந திரிலோகநாதன், வலி கிழக்கு பிரதேச சபைத் தலைவர் பூ.குணசிங்கம், நெடுந்தீவு பிரதேச சபைத் தலைவர் அ.வே. அரியநாயகம், பருத்தித்துறை பிரதேச சபைத்தலைவர் ஐ. ஸ்ரீரங்கேஸ்வரன், யாழ். பல்கலைக்கழக சமுதாய மருத்துவத்துறை தலைவர் வைத்திய கலாநிதி என்.சிவராஜா உட்பட பிரமுகர்கள் பலர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொள்வர்.

கவியரங்கம், நாடகம், பொன்மாலைப் பொழுது, இன்னிசைக் கானங்கள் உட்பட பல நிகழ்வுகள் இடம் பெறவுள்ளன.

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியினரின் அனுசரணையுடன் மேற்படி நிகழ்வு இடம்பெறவுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (க-)

# புத்தாண்டுச் சிறப்பு மலர் - 2001


அனைவருக்கும் இனிய புத்தாண்டு
நல் வாழ்த்துக்கள்
★ ஐஸ்கிறீம் வகைகளா
★ குளிர்பான வகைகளா
★ சிற்றுண்டி வகைகளா
அனைத்துக்கும்

**நியூ சாந்தி கபே அன் கூல்பார்**

73, கன்னாதிட்டி சந்தி, யாழ்ப்பாணம்.
(கி-1670)



அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் புதுவருட நல் வாழ்த்துக்கள்.
இரும்புப் பொருட்களா?
கட்டடப் பொருட்களா?
அனைத்தையும் நியாயவிலையில் பெற்றிட

**கல்கிசன்ஸ்**

16C, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(கி-1677)



அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்
அழகிற்கு அழகூட்டும் தங்க நகைகளை
உங்கள் எண்ணம்போல்
செய்து பெற்றிட

**பிரசாத் நகை அகம்**

177 GN, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(வின்சர் தியேட்டர்முன்பாக)
(கி-1659)


### புத்தாண்டே இத்தரையில் வந்திடுவாயே!

இத்தமிழ் அவனியில் ஓராண்டு
இனிக்கும் சித்திரைப் புத்தாண்டு
நித்தமும் வாழ்வில் ஒளித்தீபம்
நிரந்தர அமைதி நலம்காண
சித்தம் மகிழ்ந்திடும் வண்ணமதாய்
சிறகுகள் விரித்துமே அமைதிப்புறா
புத்திசைக் கீதம் பலபாட
புத்தாண்டே நீ வருவாயே

சு. குகதேவன்
இளங்கவி பாரதிபாலன்
(கொல்லங்கலட்டி)

### இதயம் தேடுகிறது

புதிதான ஓர் ஆண்டு
உதித்த இவ்வேளையிலே
இனிதான மலர்ச்சியினை
இதயம் தேடுதிங்கே
தென்றல்தொட்டுவெடித்த
மல்லிகையின் மொட்டுக்கள்
வேட்டுக்களின் ஒலியால்
மணமிழந்து போகின்றன
சுதந்திரம் நசுக்கப்பட்டு
சுயசிந்தை மறைக்கப்பட்டு
சுயம்புவாய் அடிமைகள்
சுபீட்சமின்றி துடிக்கின்
றதோ

எஸ். நந்தினி

### பெண்ணே சீர் கொண்டு வா

சித்திரைப் பெண்ணே நீ சீர்வரிசை கொண்டு வந்து
செந்தமிழர் நல்வாழ்வில் சிறப்புகளை தாராயோ
மாதங்களில் மூத்தவளே மனிதநேயம் கொண்டவளே
ஓடிவிட்ட நம் உறவுகளை ஒன்று சேர்த்து தாராயோ

காரை சி. சிவபாதம்


துன்பங்கள் நீங்கி இன்பங்கள் சூழ இப்புத்தாண்டு வழி சமைக்கட்டும்.
மங்கையர் மனங்கவரும் கண்கவர் டிசைன்களில் அற்புதமான தங்க நகைகளுக்கு.

**நியூ கல்யாணி நகை அகம்**

★ தங்கப்பவுண் நகை வியாபாரம் ★

87, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
(கி-1671)



அனைவருக்கும் மாருதியின் புத்தாண்டு நல் வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.
சகலவிதமான எலெக்ரோனிக் பொருட்களை மொத்தமாகவும்
சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள.

**மாருதி வர்த்தக நிலையம்**

16A ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம.
T. P. 2932
(கி-1675)



அனைவருக்கும் சாந்தி, சமாதானம், சௌபாக்கியம் நிறைந்த ஆண்டாக
இப் புத்தாண்டு அமைய அர்ச்சனாவின் வாழ்த்துக்கள்
மங்கையரின் அங்கமெல்லாம் தங்க நகைகளால்
மின்னிட யாழ் நகரில் . . .



**அர்ச்சனா ஜுவலர்ஸ்**

118, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

176 1, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்

(கி- 1678)



அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்
மங்கையரில் அங்கமெல்லாம் தங்க நகைகளால் மின்னிட இன்றே விரையுங்கள்



**சாரங்கா நகைமாடம்**

177/4, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

தலைமையகம்:-
**அருள் முருகன் நகையகம்**
96/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

கிளையகம்:-
**சாரங்கன் நகைமாடம் அன் சென்ரர்**
45, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
(கி-1655)

# புத்தாண்டுச் சிறப்பு மலர் - 2001


வாடிக்கையாளர்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் இனிய புதுவருட வாழ்த்துக்கள்

★ கட்டடப் பொருட்கள் விற்பனையில்
★ யாழ் நகரில் சிறந்து விளங்குபவர்கள்

**★ தரன் ரேடேர்ஸ் ★**

130, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். T. P. 021 - 2664

இணை நிறுவனம்:- பாக்கியரத்தினம் காட்வெயர் ஸ்ரோஸ்

பிரதான வீதி, சங்கானை T.P- 070 - 212713

(கி-1684)



எமது அன்பான வாடிக்கையாளர்கள், அன்பர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள்
அனைவருக்கும் எம் இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்

★ மோட்டார் சைக்கிள் வகைகள்
★ பற்றி வகைகள் ★ கூரைத் தகடுகள்
என்பவற்றை யாழ் நகரில் பெற்றுக் கொள்ள

**யசோ மோட்டோர்ஸ்**
**அன்**
**காட்வெயர்**

163, 165, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
T. P. 2544

(கி-1680)



இன்று தேரேறும் காரைநகர் வாரிவளவு கற்பக விநாயகரின் அருள் பாலிக்க வேண்டி அனைவருக்கும்
புது வருட வாழ்த்துக்கள்

சைக்கிள் வகைகள், அதன் உதிரிப் பாகங்கள், றேடியோ வகைகள்
மோட்டார் சைக்கிள் வகைகள்
என்பவற்றை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள.

**இ. ச. பேரம்பலம் சக நிறுவனம்**

50, 52, 54, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P 2988 Fax. 2368

(கி-1693)

# புத்தாண்டுச் சிறப்பு மலர் - 2001


அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
எமது இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்

அழகிய அன்பளிப்புப் பொருட்கள் வாழ்த்துமடல்கள்
என்பவற்றுக்கு

★ உமா வண்ணச் சோலை ★

இல. 30, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

(கி-1804)

மலரும் புத்தாண்டில்
எமது அன்பர்கள் ஆதரவாளர்கள் அனைவருக்கும்
புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்

கௌரி தையல்பொறி திருத்தகம்

சடையாளி, காரைநகர்.

அனைவருக்கும் எமது இனித்திடும் புதுவருட வாழ்த்துக்கள்.

ஐஸ்கிறீம் வகைகள், குளிர்பான வகைகள்,
சிற்றுண்டி வகைகள் அனைத்துக்கும்.

ஸ்ரீ கிருஸ்ணா கிறீம் ஹவுஸ்

கொடிகாமம் வீதி, நெல்லியடி.

[கி-1811]

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்

★ பலசரக்குப் பொருட்கள்
★ பால்மா வகைகள்

என்பவற்றை
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ள

குகன் களஞ்சியம்

T-P- 2767

180 (38ப),ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(கி/1814)

அனைவருக்கும் ஜெசிபா ஏஜென்சி ஸ்தாபனத்தாரின் புத்தாண்டு வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.
நாட்டின் முதற்தர சீமெந்து வகைகளான ★ மிற்சுபி ☆ அட்லஸ்
என்பவற்றின் விற்பனையாளர்கள்.

ஜெசிபா ஏஜென்சி

132, ஸ்ரான்லி வீதி,
T. P:- 2407

யாழ்ப்பாணம்.
FAX:- 2140

(கி/1805)

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது புதுவருட வாழ்த்துக்கள்.

ஆண்கள், பெண்களுக்கான வண்ண வண்ண ஆடைகளின்
சாம்ராஜ்யம்

ரவி அன் ராஜ் சில்க்ஸ்

77, பெரியகடை, T.P 2469 யாழ்ப்பாணம்.

(கி/1810)

# புத்தாண்டுச் சிறப்பு மலர் - 2001


அனைத்து உள்ளங்களுக்கும் இனிய சித்திரைப் புத்தாண்டு வாழ்த்துக்கள்.

சுபமுகூர்த்தப்பட்டுப்புடவைகளுக்கு கைராசியான ஸ்தாபனம்.

## மங்கை சில்க்ஸ்

8, நவீன சந்தை, சுன்னாகம்.

(கி-1688)



அனைவருக்கும் கல்யாணியின் இனித்திடும் புதுவருட வாழ்த்துக்கள்

**ஐஸ்கிறீம்வகைகள், சிற்றுண்டி வகைகள்**

**என்பவற்றை சுவைத்து மகிழ**

## கல்யாணி கிறீம் ஹவுஸ்

73, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

[கி-1687]


## புத்தாண்டில் அருளாசி
## சர்வதேச இந்துமத குருபீடம்

'விஷு' என்னும் நாமத்துடன் மலரும் சித்திரைப் புத்தாண்டு அனைத்து மக்களுக்கும் அமைதியையும், ஆனந்தத்தையும் ஏற்படுத்தும் ஆண்டாக மலர அனைத்து குருமார்களின் சார்பில் எமது அருளாசியை வழங்குகின்றேன்.

இவ்வாறு சர்வதேச இந்துமத குருபீடத் தலைவர் பிரம்ம ஸ்ரீசாஸ்தா பீடாதிபதி ஸ்ரீஐயப்பதாஸ சாம்பசிவ சிவாச்சாரியார் புத்தாண்டுச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும்:–

பல வழிகளாலும் சொல்லொணாத் துயரை அனுபவிக்கும் எம் மக்களுக்கு நிரந்தரமான, நிம்மதியான வாழ்வு மலர அமைதி, சாந்தி, சமாதானம் நிலவ இறையருளை வேண்டி புத்தாண்டு நல்வாழ்த்துக்களையும், அருளாசியையும் வழங்குகிறேன்.

சுபம்


துன்பங்கள் நீங்கி இன்பங்கள்சூழ அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்கள்.

★ ராஜா ஸ்பெஷல் ஐஸ்கிறீம்
★ வனிலா ஐஸ்கிறீம்
★ சொக்லட் ஐஸ்கிறீம்
★ குளிர்பான வகைகள்

என்பவற்றை சுவைத்து மகிழ

## ராஜா கிறீம் ஹவுஸ்

36, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்.

கிளையகம்

64, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(கி-1691)



காரைநகர் வாரிவளவு கற்பக விநாயகர் தேர் சிறப்புற வாழ்த்துவதோடு அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்

★ **இரும்புப்பொருட்கள்,** ★ **கட்டடப் பொருட்கள்,**

**அனைத்தையும் மொத்தமாகவும் சில்லறையாகவும்**

**நியாய விலையில் பெற்றிட**

## கஜமுகன் ஹாட்வெயர்

147, 149, ஸ்ரான்லி வீதி, T.P- 2833 யாழ்ப்பாணம்.

(கி-1694)



அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் நியூ விமாகி ஸ்தாபனத்தாரின் புத்தாண்டு வாழ்த்துக்கள்

★ **குளியலறை உபகரணங்களுக்கும்**

★ **மட்பாண்ட அன்பளிப்பு பொருட்களுக்கும்**

**இன்றே நாடுங்கள்**

## நியூ விமாகி

27/3, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

(கி/1801)

# புத்தாண்டுச் சிறப்பு மலர் - 2001

அனைவர் வாழ்விலும் மங்களம் பொங்கி மகிழ்வை தந்திட சித்திரைப் புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்.

நவீன ரக ஆடைத் தெரிவுகளுக்கும் மற்றும் சுபமுகூர்த்த பட்டுப் புடவைகளுக்கும்

**காவேரி பட்டுச் சோலை**

இல: 48, பெரிய கடை யாழ்ப்பாணம்.

(கி-1450)

எம் இனிய அன்பு உள்ளங்களுக்கு சித்திரைப் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

உங்கள் மனம் கவரும் ஆடைத் தெரிவுகளுக்கு

**ஏகாம்பரம் புடவை மாளிகை**

இல. 72, பெரிய கடை, யாழ்ப்பாணம்.

(கி-1653)

வருகின்ற புத்தாண்டு தமிழர் தம் தேசத்தில் தளைத்தோங்க வழி சமைக்கட்டும்

தையல் மெசின், மின் விசிறி, ஜெனரேற்றர், அதற்கான உதிரிப்பாகங்கள் என்பவற்றைப் பெற்றுக் கொள்ள நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்.

**உஷா**

147, ஸ்ரான்லி விதி, யாழ்ப்பாணம்.

(கி-1449)

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்

தங்க வைர நகைகளை உங்கள் மனம் விரும்பும் டிசைன்களில் செய்து பெற்றிட இன்றே நாடுங்கள்.

**நியூ விவேகா ஜுவலர்ஸ்**

**தங்கப் பவுண் நகை வியாபாரம்**

112 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (பெற்றோல் நிலையம் முன்பாக)

உரிமையாளர்: கனக சபாபதி விவேகானந்தன்

(கி-1651)

## சித்திரைப் பூக்கள்

சித்திரைப் பூக்களே
தென்றலாய் வீசுங்கள்
முத்தாரப் பந்தல்களே
முகமூடிகளைக் கிழியுங்கள்

அணுக்களின் அகரங்களே
அறிவியலைப் பாருங்கள்
துணிவுகளின் தோழர்களே
தேசத்தை வாழ்த்துங்கள்

வெள்ளைப் புறாக்களே
வசந்தத்தை அழையுங்கள்
மல்லிகைப் பூக்களே
மனிதத்தை விளையுங்கள்

செவ்வானத்தின் முத்து
களே
தேவைகளை எழுதுங்கள்
ஔவையின் சொத்துக்
களே
ஆளுமையை விதையுங்கள்

**நல்லை அமிழ்தன்**

மலர்ந்துள்ள இப் புத்தாண்டில் அனைவரும் சீரும் சிறப்பும் பெற்று வாழ வாழ்த்துகின்றோம்.

உங்கள் மேனிக்கு அழகு சேர்க்கும் வகையில் கண்ணைக் கொள்ளை கொள்ளும் தங்க நகைகளை செய்து தருபவர்கள்.

**நிருத்திகா ஜுவல்லர்ஸ்**

177, கஸ்தூரியார் வீதி; யாழ்ப்பாணம்:

T. P. 2694

(கி-1661)

அனைவருக்கும் இனித்திடும் சித்திரைப் புத்தாண்டு நல் வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.

எழில் குன்றா அழகிய தங்க நகைகளை குறித்த தவணையில் செய்து பெற்றுக்கொள்ள இன்றே விரையுங்கள்.


**தயா நகைப் பூங்கா**

213C, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(கி-1660)

அனைவருக்கும் எமது சித்திரைப் புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்.

எல்லோருக்கும் ஏற்ற எல்லா காலத்திற்குமான எல்லா வித நகைகளையும் அசல் 22 கரட்டில் செய்து பெற்றிட.



**நியூ நகுலா ஜுவல்லறி**

74, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**நியூ லலிதாஸ் ஜுவல்லறி**

171, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**நகுலா நகைமாடம்**

241G, கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்.

(கி/1446)

# புத்தாண்டுச் சிறப்பு மலர் - 2001

அனைவருக்கும் எமது இதயம் கனிந்த புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நங்கையர் விரும்பும் நவநாகரிக தங்க நகைகளை செய்து பெற்றுக் கொள்ள

**நியூ லலிதா ஜுவல்லர்ஸ்**

தங்கப்பவுண் நகை வியாபாரம்

170, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(கி-1665)

## மிளிர்ந்தே வருக புத்தாண்டே!

வருக வருக புத்தாண்டே
வசந்தமதை மலர்த்திடவே
தருக தருக சாந்தியினை
தரணியில் அமைதி பெருகிடவே!

புதுமைப் பொலிவைப் பொழிந்திடவே
புன்னகைப் பூவாய் மலர்ந்திடுக
பதுமையான வாழ்வினையே
படைக்க விரைந்தே வந்திடுக!

புதிய புதிய நல்வரங்கள்
புலர்க இந்தப் பூமிதனில்
விதியை எமக்கு நல்லதனாய்
விரைந்தே மாற்றித் தந்திடுக;

நாட்களெல்லாம் நம்பிக்கையை
நாட்டுதற்கே புலர்ந்திடுக
வாட்டமற்ற மனிதமதை
வளர்த்திடவே வந்திடுக!

**சூரியநிலா**
ஈச்சமோட்டை

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது புதுவருட வாழ்த்துக்கள்.

நவீன வடிவமைப்புக்களில் அழகிய தங்க நகைகளை செய்து பெற்றுக் கொள்ள இன்றே விரையுங்கள்.

**நியூ இந்திரன் ஜுவல்லர்ஸ்**

213A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(ராஜா சினிமா அருகில்)
(கி-1664)

அனைவருக்கும் எமது இனிய புதுவருட வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்

மங்காத அசல் 22 கரட் தங்க நகைகளுக்கு நீங்கள் நாட வேண்டிய இடம்

**நியூ பிரியங்கா ஜுவல்லர்ஸ்**

தங்கப் பவுண் நகை வியாபாரம்

117, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(கி-1669)

நாட்டில் சாந்தி, சமாதானம் நிலவி அனைவரும் சகல சௌபாக்கியங்களும் பெற்று வாழ பிரார்த்திக்கின்றோம்.

புதுமையும் எழிலும் பொலிவும் கொண்ட பட்டு பருத்தி ஜவுளிரகங்களின் காட்சிக் கூடம்

**சிவகணேசன் ரெக்ஸ்ரைல்ஸ்**

41, பெரிய கடை, T. P - 2063 யாழ்ப்பாணம்.
(கி-1668)

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் வர்த்தகர்கள் அனைவருக்கும் சாருணியின் புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்

**சாருணி ஜுவல் கட்டிங் வேக்**

70, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.
(கி-1658)

வாடிக்கையாளர்கள், அன்பர்கள், நண்பர்கள் அனைவருக்கும் இனிய சித்திரைப்புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்.

மங்கையரின் மனதைக் கொள்ளை கொள்ளும் மங்காத 22 கரட் தங்க நகைகளுக்கு

**நியூ ராதிகாஸ் நகை மாளிகை**

தங்கப்பவுண் நகை வியாபாரம்

189, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(கி-1657)

இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு
**குறள்**

## வலம்புரி

### அறுபதின் அசைவுகள்

தமிழ் - சிங்களப் புத்தாண்டு இன்றுமலர்கிறது வருடந்தோறும் புத்தாண்டு மலர்வதும் இன்னொரு ஆண்டு நகர்வதும் இயல்பு எனினும், விஷு வருடப்பிறப்பு ஏனைய வருடப்பிறப்புகளிலும் வித்தியாசமானது. புலிகளின் யுத்த நிறுத்தமும், அரசின் தாக்குதல் தவிர்ப்பும்வடபுலத்தில்ஊரடங்கு நீக்கம் என்பன ஒருமித்து நடக்க விஷுவருடம்பிறக்கிறதெனில் ஏனைய வருடங்களிலும் இவ் வருடம் ஏதோ ஒரு வகையில் அமைதியை - சமாதானத்தை தனது பிறப்புடன் சேர்த்துள்ளதை உணரமுடிகிறது.

அறுபது வருட சுழற்சியில் தமிழ் சிங்கள புத்தாண்டு அமைந்துள்ளது அவ்வகையில் இற்றைக்கு அறுபது வருடங்களுக்கு முன விஷுவருடம்பிறந்த போதும் அறுபது வருடங்களின் பின் இன்று விஷு வருடம் பிறந்ததற்கும் ஓர் எதிர்க்கணிய ஆனால எம்மால் உணர முடியாத தொடர்பு உண்டு என்பதை மறுக்க முடியாது.

அறுபது ஆண்டுகளுக்கு முன்பு இலங்கை பிரிட்டனின் ஆட்சியில் இருந்தது. ஆனால் இன்று இலங்கை ஓர் குடியரசாக இருந்த போதிலும் இந் நாட்டின் ஜனாதிபதி ஏதோஒரு காரணத்தால்பிரிட்டனில தங்கியுள்ளாரெனில் பிரித்தானிய அரசால் இலங்கைக்கு வழங்கப்பட்ட சுதந்திரத்தில் ஏதோ ஒரு தவறு உண்டென்பதை உணரமுடிகிறது.

அறுபது ஆண்டுகளுக்கு முன்னர் பிரிட்டனின் ஆட்சியிலிருந்த இலங்கையில் அறுபது ஆண்டுகளின் பின்னர் - இப்போது தமிழர்களின் பிரச்சினையைத் தீர்த்து வைக்க வேண்டுமென்பதில் பிரிட்டன் அரசு முனைப்புடன் உள்ளது.

அதேவேளை இனப் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்காக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவும் லண்டன் சென்று பிரிட்டனின் ஆலோசனையைப் பெறவேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளதெனில் காலஅசைவுகள்-இயற்கை நியதிகள் மாற்றங்களையும், மாறுதல்களையும் ஏற்படுத்திக் கொண்டேயிருக்கிறது. இப்புத்தாண்டின் ஒரு சுழற்சி முடிவில் என்னென்ன மாறுதல்கள் ஏற்படும் என்பதை எவராலும் தீர்மானிக்க முடியாது.

எனினும் விஷுவருடம் யுத்த நிறுத்தத்துடன் மலர்ந்துள்ளதால் மக்கள் மத்தியில் நம்பிக்கையை ஏற்படுத்தி யுள்ளது.

---

**திறனாய்வுக்களம்**

# இன்றைய அவலங்களையேசுவின்பாடுகளுடன் ஒன்ற வைத்த சிறந்த நாடகம் 'காவியநாயகன்'

**எம். ஷாந்தன் சத்தியகீர்த்தி**

முதன் முதலாக 1964 இல் திருப்பாடுகளின் காட்சியை அரங்கேற்றிய அருட்கலாநிதி நீ. மரியசேவியர் அடிகளாரின் உள்ளத்தில் மனிதத்தின் பாடலாகவும் தேடலாகவும் கருக்கொண்ட 'காவியநாயகன்' தவக்கால ஆற்றுகை எமது மண்ணினதும மக்களதும் காவியங்களை இரண்டரை மணி நேரத்துள் வெற்றிகரமாய் சத்திரசிகிச்சைக் குட்படுத்தியது.

இயேசுவின் பாடுகளையும் அர்ப்பணிப்புகளையும் கூற வந்த ஆற்றுகை வடிவம் ஒரு படி மேலே சென்று எமது மண்ணினதும் மக்களதும் வாழ்நிலை அவலங்களை, ஏக்கங்களை, எதிர்பார்ப்புகளை கூற விளைந்த திறன் அனைவர் உள்ளங்களையும் பற்றி நின்றது.

### மனிதத்துவம்

இறைவா நீ இருக்கின்றாயா? நீ இறந்து விட்டாய். மனிதா நீ இருக்கின்றாயா? என்ற வினாக்களை ஏக்கங்களாகத்தாங்கி ஆரம்பமாகும் 'காவியநாயகன்' முழுமையாக மனிதத்தின் தேடலாக மனித மனங்களுடனேயே பேசியது. நமது வாழ்வியலில் ஒரு புறம் இறைவன் மறுபுறம் மனிதன். இரண்டுக்கும் நடுவே மனிதத்தின் இருப்பு, இப்படி இடையிடையே வரும் இதயத்தை ஆழத்தொடும் வசனங்களுக்கிடையிலும் இயேசுவின் வாழ்வுக்கிடையிலும் எவ்வித வித்தியாசத்தையும் கண்டுகொள்ள முடியவில்லை. இறைமகனின் பாடுகள், மத குலத்தின் விடிவை நாக்கிய ஒரு தேடலாக அமைவதையே 'காவியநாயகன்' சித்தரிக்கின்றது தன கனவாழாது பிறர்க்கென உழும் பெருங்குணம் படைத் மனிதருக்குள்ளே என்றும் இறக்காது வாழ்ந்து கொண்டிருக்கும் மனிதத்தை இயேசுவின் ஒவ்வொரு வார்த்தையிலும் மௌனத்திலும் வெளிப்படுத்திய விதம் உணர்வோடு மட்டுமல்ல உயிர்ப்போடு பிரகாசித்தது.

### நீதிவெல்ல வேண்டும்

அன்பு, அருள், அமைதி மூன்றுக்கும் துணையாய் வாழ்ந்து காட்டிய இயேசுவின் பாடுகளை ஒருவர் உணர்வதற்கும் ஏற்ற களமாகக் 'காவிய நாயகன்' அமைந்தது.

நிதமே செத்துக் கொண்டிருக்கும் இம்மண்ணிலே நெருக்கடிகள் மிகுந்த சூழலில் ஒரு தியாக வாழ்வுக்காய் தன்னை அர்ப்பணித்த புனிதரின் பாடுகளை ஒத்த அவலங்களை எதிர்கொண்டிருக்கும் மக்களுக்கு நீதி வெல்ல வேண்டும். சமாதானம் இன்று மக்களுக்குத் தேவை என்பதை உணர வைத்தது.

கருத்தொற்றுமை இன்மையே எம் இனத்தின் சாபக்கேடு. இப்படியானவர்களை ஆற்றுகையின் இடையே நாசூக்காகக் கையாண்டமை எமது வாழ்வியலோடு ஒட்டிய யதார்த்தத்தைப் பேசியது, 250 கலைஞர்களின் பங்களிப்போடு பார்வையாளர்களைத் தன்னோடு ஒன்றிணைத்த ஆற்றுகை என்ற பெருமையையும் காவியநாயகன்' பெறுகிறது.

### இதய ஏக்கம்

இயேசு சிலுவையில் அறையப்பட்ட போது எம் இனத்தின் இதயக் குரலையோ மீட்பர் அன்று எழுப்பினார் என்ற ஆதங்கமே அனைவர் உள்ளத்திலும் இருந்தது. இயேசுவின் கல்வாரிப் பயணத்தைச்சித்தரிக்கும் காவிய நாயகனின் பயணத்தில் தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகள் வெளிப்படுத்தப்பட்ட பாங்கு மற்றும் சபிக்கப்பட்ட இனமாக சித்திரவதைகளுக்கும், அகதிவாழ்வுக்கும் முகம் கொடுத்துக் கொண்டிருக்கும் எம் இனத்தின் விமோசனத்தை தமிழின விடுதலையை வேண்டி ஏங்கி நிற்கும் மக்களை மேலும் அவை குறித்து ஆழமாகச் சிந்திக்கத் தூண்டிய வகையில் ஆற்றுகை செய்யப்பட்ட விதம் என்பன மக்களின் எதிர்பார்ப்பை சொல்லாமற் சொல்லி நின்றன.

தவக்காலத்தை முன்னிட்டு வருடாந்தம் மேடையேற்றப்பட்டு வரும் இந்நாடகம் பெருந்தொகையான கலைஞர்களின் பங்களிப்பில் ஆற்றுகைசெய்யப்பட்ட பொழுது ஜெருசலேம் நகரின் அக்கால சமுதாய நிலைமை தெட்டத் தெளிவாகப் புலப்பட்டது.

37வருடங்களாகதொடர்ச்சியாக இப்பணியில் ஈடுபட்டு வரும் அடிகளார் எழுதிய பிரதிகளில் கல்வாரியின் கடவுள், அன்பில் மலர்ந்த அமர காவியம், சாவை வென்ற சத்தியன், கவலையின் எல்லை அமலன் காட்டிய வழி.

### பாத்திரத்தோடு ஒன்றியநடிப்பு

வேடஉடை, ஒப்பனை, ஒலி, ஒளி, அரங்க அமைப்புக்கள், இசை நடன அமைப்புகள் சிறப்பாக இருந்தன. நவீன உத்திகளை அரங்கில் கையாண்டமை மூலம் பார்வையாளரின் எண்ணங்களைச் சிதறடிக்காது அவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து பேசுவதோடு ஒன்றைச் செய்த பாங்கும் நடிகர்கள் தாம் ஏற்றுக் கொண்ட பாத்திரத்தில் ஒன்றிச் செயற்பட்டமை யதார்த்தைப் பெரிதும் புடம் போட்டுக் கொண்டது. கருத்தாழம் மிக்க மனிதத்தின் மாண்பை வெளிக் கொணர்ந்த பாடல்களும் அவற்றுக்கு முகம் கொடுத்த நடிகர்களும் சிறப்பாகவே தமதுபணியையேற்றிருந்தனர். யூதாஸ் இயேசுவைக் காட்டிக்கொடுக்கும்காட்சியில்ஒரு தொய்வு நிலைஏற்படு கிறது

சமயத்தை அரசியல் ஆக்கியும் அரசியலைச் சமயம் ஆக்கியும் தமது சுய இலாபங்களுக்காய் செயற்படுவோர் மத்தியில் காவியநாயகனின் அர்ப்பணிக்கப்பட்ட வாழ்வு மனித மனங்களின் தேடல்களைப்பேசிய வாழ்வாக முடிந்து விட்டது.

---

# எழுபத்தைந்துவருடங்களுள்ஐம்பது வருடங்கள் இலங்கை வானொலியுடனான நினைவுப்பதிகை

**பேராசிரியர்**
**கார்த்திகேசு சிவத்தம்பி**

### அனுபவங்களின் நினைவு

நினைவுகளை ஒழுங்கு படுத்தி அவற்றை எண்ணக் கருக்களாக எடுத்துச்சொல்ல முனைகின்ற பொழுது அந்த அனுபவங்களின் நினைவே நெஞ்சில் ஆரோகணப்பட்டு எழுகின்றன.

அறுபத்தெட்டு வயதில் நின்று கொண்டு பதினெட்டின் அனுபவங்களை நினைத்துப் பார்க்க சம்பவம் சம்பவமாக எழுதவேண்டும் போல இருக்கிறது. அதற்கு இது இடமல்ல;

முதலில் ஒலிபரப்புத் துறையின் என் அருமை நண்பர்கள் சிலருக்கு நான் அஞ்சலிகளைச் சமர்ப்பிக்க விரும்புகின்றேன்;

என்னை வானொலி முதலில் இனங்கண்டது நடிகனாக. நடிகரின் மிகப் பெரிய மானுடப்பலம் அவர் மற்றைய மனிதர்களின் உணர்ச்சிகளையும் உணர்வுகளையும் அறிந்தவர் என்பது தான். அப்படி இல்லாதவர் உண்மையான நடிகராக முடியாது. நடிகன்போலியல்லன். அவன் உணர்வுகளைப் புத்துயிர்ப்புச் செய்பவன்.

நான் அறிந்த நண்பர்கள் சிலர் அத்தகைய சிறந்த நடிகர்களாக இருந்தார்கள்.

இந்தக் கட்டத்தில் இலங்கையின் தமிழ் ஒலிபரப்பு எதிர்நோக்கும் ஒரு வரையறைபற்றிக்குறிப்பிடவேண்டும். சிங்களத்தில் வானொலி நடிகர்கள் மிகச் சுலபமாக திரைக்குச்செல்வதுவழக்கம்; அந்த வாய்ப்பு நமது கலைஞர்களுக்கு இல்லை. தமிழ் நாட்டிலும் மேடையிலிருந்து சினிமாவுக்குச் சென்று முத்திரைபதித்துள்ளவர்கள்பலர்

ஒலிபரப்பாளர்கள் என்ற வகையில் மறைந்த மாபெரும் கலைஞர்களான வி. என். பாலசுப்பிரமணியம் எம். எஸ். இரத்தினம், சானா சண்முகநாதன், சில்லையூர் செல்வராஜன், க. கைலாசபதி, எஸ் பி. மயில்வாகனன், எஸ். கே. பரராஜசிங்கம், வி. எ. சிவஞானம் ஆகியோருக்கு என் அஞ்சலிகளைச் செலுத்துகின்றேன்.

வாழும்நண்பர்கள், வி. சுந்தரலிங்கம், வி. எ. கபூர், எஸ். எம். எ. ஜபார், தாசன் பர்னாந்து, பேராசிரியர் நந்தி சிவஞானசுந்தரம், பொன்மணி குலசிங்கம், இராஜேஸ்வரி சண்முகம், எஸ். சரவணமுத்து, ஜோர்ச் சந்திரசேகரன், சி. வி. ராஜசுந்தரம், காவலூர் இராஜதுரை, இரா பத்மநாதன், கதிரவேலு, வர்ணகுலசிங்கம்ஆகியோருக்கு என்நெஞ்சு நிறைந்த வாழ்த்துக்கள்.

(முற்றும்)

---

## தவக்காலச் சிந்தனை-46



பஞ்சம் ஏற்பட்டது. பிழைப்புத் தேடி சென்றது ஓர் குடும்பம். தந்தை தனது இருகுழந்தைகளையும் சுமந்துசென்றார். நீண்ட பயணத்தால் நோய்வாய்ப்பட்ட குழந்தை ஒன்று வழியிலேயே இறந்து விட்டது. நல்ல இடத்தில் இறந்த குழந்தையை விட்டுச் செல்லலாம் என தொடர்ந்து சுமந்து சென்றார் தந்தை. இரவானதும் மீண்டும் சுமக்க இயலாமல் ஒரு குழந்தையை விட்டு விட்டு ஒரு குழந்தையுடன் சென்றார்கள். காலையானதும் தோளில் உறங்கும் குழந்தையை எழுப்பினர். அப்பொழுது தான் அவர்களுக்குத்தெரிய வந்தது. உயிருள்ளகுழந்தையை வழியில் போட்டு விட்டு இறந்த குழந்தையைச்சுமந்து வந்தனர் என்று. இப்பெற்றோர் இறந்த குழந்தையில் உயிருள்ளதை தேடினர். உயிருள்ளது இங்கு இல்லை. இன்றைய நற் செய்தியில் வானதூதர் பெண்களிடம், ஏன் உயிரோடு இருப்பவரை கல்லறையில் தேடுகிறீர்கள்? கிறிஸ்தவம் உயிர்த்த கிறிஸ்துவின் கல்லறையைத்தாண்டி தொடர்ந்து வாழ்வது. இயேசுவைச் சாவினின்று உயிர்த்தெழச் செய்தது, அவரது அன்பு செய்யும் இதயம். தன்னையே தாழ்த்தி அடிமையின் சாயலைத் தாங்கி சிலுவைச் சாவை ஏற்கும் அளவுக்கு அன்பு செய்தார். அவருக்கு வாழ்வில் ஓர் இலக்கு இருந்தது. எல்லோரையும் இறையாட்சியின் பிள்ளைகளாக மாற்ற வேண்டும் என்பதே அது. அவருக்கு இலட்சியம் இருந்தது உண்மை வாழ்வோடு உரசிப் பார்க்கப்பட்டு அனுபவம் ஆகும்பொழுது தான் அது வாழ்வை வழி நடத்தும் இலட்சியமாக மாறுகிறது. எனவே இயேசு உண்மைக்கு சாட்சியம் புரியவே வந்தேன், வாழ்கிறேன் என்கிறார். இலட்சியம் கொண்டு வாழ்வோர் தொடர்ந்து வாழ்வர். சிறையில் அடைக்கப்பட்ட சாக்ரட்டீஸிடம் அவரை தப்புவிக்க நண்பர்கள் கேட்டபோது, அவர் "வாழ்வை அன்பு செய்யாதவர்கள், வாழாதவர்களே சாவை சந்திக்க அச்சம் கொள்வர்" என்றார். நகமும் வாழ்விப்பதற்காக வாழ்வோம்! கல்லறையைாம்தாண்டிதொடர்ந்து பிரகாசிப்போம்.

-காவலன்-

**நோர்வே - - -**

6ந்திகதி இருநாள்விஜயத்தை மேற் கொண்டு யோன் வெஸ்ப் பேர்க் வன்னி சென்று புலிகளின் தலைவர்களைச் சந்தித்து பேசியமை தெரிந்த தே. (இ-05)

**நாட்டில் - - -**

விடங்களை இழந்து, குடிசை களில் வாழ்கின்றபரிதாப நிலையை நாம் காண்கிறோம்

புத்தாண்டில் ஆடிப்பாடி மகிழவேண்டியசின்னஞ்சிறார் கள்ஏழ்மையின் கொடுரத் தால் மகிழ்விழந்துகாணப்படு கின்றனர்.

இத்தகைய சூழ் நிலையில் ஏழைகளுக்கும், இடம்பெயர்ந் தவர்களுக்கும் எம்மாலான உதவிகளைச் செய்து அவர்க ளின்வாழ்விலும் சிறுமகிழ்வை யாயினும் ஏற்படுத்துவோமா யின் அதுவே இறைவனுக்கு நாம் செய்யும் பெரும் சேவை யாகும் என்றும் புத்தாண்டுச் செய்தியில் சுவாமிகள் தெரி வித்துள்ளார். (ந)

**தேசிய - - -**

பாணத்தில் தங்கியிருப்பார் கள்.

இவர்களுடன் தென்னிலங் கை பத்திரிகையளர்களும் வர வுள்ளனர் இவர்களதுவருகைக் கான ஏற்பாடுகளையும் நிகழ்ச்சி அட்டவணையை யும் பேராசிரியர் இரா.சிவ சந்திரன் தயாரிக்கவுள்ளார்.

பேரவை உறுப்பினர்களு டன் கலந்துரையாட விருப்ப முடையவர்கள் தன்னுடன் 2454 இலக்க தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ளு மாறு கேட்டுள்ளார். [ம]

---

## பிரமிட்
## CD வெளியீடு

- ★ கடமை கண்ணியம் கட்டுப்பாடு
- ★ வரவு நல்ல உறவு
- ★ சின்ன வீடு
- ★ கழுகு
- ★ பல புதிய மேடை நிகழ்ச்சிகள்
- ★ பல புதிய காட்டூன் CD கள்

வெளிவரஇருக்கும் தமிழ் திரைப்பட போஸ் டர்கள் 95/- மட்டுமே!

- ★ புதியபழைய ஓடியோ CDகள் விற்பனைக்கு உண்டு

**I.T N. வீடியோ ஓடியோ**
பரமேஸ்வராச்சந்தி
திருநெல்வேலி.

*I. T, N.* வீடியோ
கொக்குவில்

[ 2914]

---

## புதுவருட மலிவு விற்பனை

தமிழ் வீடியோ CDகள் மலிவு விற்பனையில் 14ம், 15ம், 16ம் திகதிகள் வரை [மூன்று தினங்கள் மட்டுமே]

**I.T.N வீடியோ ஓடியோ**
பரமேஸ்வராச்சந்தி
திருநெல்வேலி

[ 2915]

---

அனைவருக்கும் எமது புதுவருட வாழ்த்துக்கள்

## இனாம்! இனாம்!! இனாம்!!!
## முந்துங்கள்! முந்துங்கள்!! முந்துங்கள்!!!

கருப்பஞ்சாற்றுடன் தேனும் பாலும் கலந்த சுவை நிறைந்த

**மல்லிகா விலாஸ் கச்சான் அலுவா இலவசம்...**

பிரத்தியேக சுவையூட்டப்பட்ட மல்லிகா விலாஸ் கச்சான், மசாலாப் பகோடோ 250 கிராம் பொதி ஒன்றினைக் கொள்வனவு செய்யும் ஒவ்வொரு வாடிக்கையாளர்கள், விற்பனையாளர்களும் மல்லிகா விலாஸ் சிறப்புத் தயாரிப்பான தேனும் பாலும் கலந்த சுவையுடைய கச்சான் அலுவாவை இலவசமாகப் பெற்றுக் கொள்ளலாம் என்பதை மிகவும் மகிழ்ச்சியுடன் அறிமுகம் செய்கின்றோம்.

**250கிராம் பொதிஒன்றின் விலை ரூபா35.00மட்டுமே! விரையுங்கள்**
**விற்பனையாளர்களுக்குவிசேட விலைத்தள்ளுபடி வழங்கப்படும்.**

## மல்லிகாமிக்ஷர்மாளிகை

உங்கள் நாவினிக்கும்
சிற்றுண்டி உணவகம்.

இல. 149, மனசாரநிலையவீதி, யாழ்ப்பாணம்.
பஸ்நிலையம் அருகில்

தொழிலகம்- கூழாவடி- ஆனைக்கோட்டை

---

**அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் விஜயின் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!**

எழில் கொஞ்சும் வண்ணப் படங்களை மிக்சிங் முறையில் படம் பிடிப்பவர்கள் மற்றும் அடையாள அட்டை பாஸ்போட் கறுப்பு வெள்ளைப்படங்களை சிறந்த முறையில் படம்பிடித்துத் தருபவர்கள்.

## விஜய் ஸ்ருடியோ

**கோண்டாவிலவீதி, இருபாலைச்சந்தி, கோப்பாய்.**

குறிப்பு:— கோண்டாவில் வீதி, கோப்பாய் அரசினர் ஆசிரியபயிற் சிக் கலாசாலைக்கு அருகில் இயங்கிய எமது ஸ்தாபனம் தற்பொழுது இருபாலைச் சந்தியில் இயங்குகிறது என் பதை வாடிக்கையாளர்களுக்கு தெரியப்படுத்துகிறோம்.

---

அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் மேசியாவின் இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!

**புதுமையும் எழிலும் கொண்ட அசல் 22கரட் தங்க நகைகளால் மங்கையர், ஆடவர் மனதை கொள்ளை கொள்பவர்கள்**

## மேசியா நகை மாடம்

**11C, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

---

அனைவருக்கும் சுஜானாசின் புதுவருட வாழ்த்துக்கள்

வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட ஆண்கள். பெண்களுக்கான ஆடைத்தினுசுகளின் சங்கமம் அதுவே

## சுஜானாஸ் அன் றெஸ்பொயின்ற்

23, 24A, மின்சாரநிலைய வீதி, :: யாழ்ப்பாணம்

(கி 1815)

---

அன்பர்கள்! நண்பர்கள். வாடிக்கையாளர்கள் ஆதரவாளர்கள்- அனைவருக்கும் இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள் காலத்திற்கு உகந்த நவீன டிசைன்களில் தங்க நகைகளை

பெற்றுக் கொள்ள சிறந்த நகையகம்

## மகாநதி ஜுவல்லறி

தங்கப் பவுண் நகை வியாபாரம்

ஓடர் நகைகள் குறித்த தவணையில் செய்து கொடுக்கப்படும்

72A, கஸ்தூரியார் வீதி, :: யாழ்ப்பாணம். [கி1802]

இப்பத்திரிகை ''வலம்புரி'' அன்கோ ஸ்தாபனத்தாரால் இல: 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவ களது அச்சகத்தில் 2001 ஆண்டு ஏப்ரல் மாதம் 14ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.